இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 154 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – மார்கழி 28 – சனிக்கிழமை 13 ஜனவரி 2024 – திருச்சி ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 154 : Thiruvalluvar Year - 2054 - Margazhi 28 - Saturday 13 January 2024 - Trichy ★★ 12 Pages ₹ 5.00

## கொளத்தூர் தொகுதியில் சமத்துவப் பொங்கல் விழா!

# முதல்வர் மு.க.ஸ்டாலின் பரிசுப் பொருட்கள் வழங்கினார்!



முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.1.2024) கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் அருகில் நடைபெற்ற பொங்கல் விழாவில் சமத்துவ பொங்கல் கொண்டாடினார். உடன் திருமதி துர்கா ஸ்டாலின் அவர்கள் உள்ளார்.

## பொதுமக்கள் – கழக முன்னணியினர் பங்கேற்பு!

**சென்னை, ஜன.13–**

**தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு – கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது துணைவியார் திருமதி துர்கா ஸ்டாலின் அவர்களுடன் தனது தொகுதியான கொளத்தூர் தொகுதியில் மக்களுடன் இணைந்து பொங்கல் வைத்து கொண்டாடினார். மேலும் ஆயிரக்கணக்கான பொதுமக்களுக்கு பொங்கல் திருநாளை முன்னிட்டு நலத்திட்டப் பொருட்களை வழங்கி பொங்கல் வாழ்த்துகளைத் தெரிவித்தார்.**

**இதுபற்றிய விவரம் வருமாறு:–**

தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் பொங்கல் திருநாளுக்கு அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் பரிசுத் தொகுப்பு வழங்குவது வழக்கம். அதன்படி, இந்தாண்டும் ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, ஒரு முழுக் கரும்பு மற்றும் ரூ.1,000 ரொக்கப் பணம் ஆகியவை கொண்ட பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்குவதாக தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

அதன்படி 10.01.2024 அன்று காலை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள நியாய விலைக் கடையில் பொதுமக்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு மற்றும் ரூ.1000 வழங்கி இத்திட்டத்தினைத் துவக்கி வைத்தார். இத்திட்டத்தினால் தமிழ்நாடு முழுவதும் உள்ள 2 கோடிக்கும் மேற்பட்ட குடும்பத்தி னர் பெரும் மகிழ்ச்சி அடைந்து முதல்வர் அவர்களுக்கு தொடர்ந்து நன்றி தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.01.2024) மாலை கொளத்தூர் தொகுதியில் மனைவி துர்கா ஸ்டாலினுடன் சமத்துவ பொங்கல் விழாவில் பங்கேற்றார்.

தனது கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் அருகில் நடைபெற்ற பொங்கல் விழாவில் பங்கேற்ற முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், திருமதி துர்கா ஸ்டாலின் ஆகியோர் தொகுதி மக்களுடன் இணைந்து பொங்கல் வைத்து விழாவை கொண்டாடினர்.

இதில் கொளத்தூர் தொகுதி மக்கள், மாணவியர் உள்ளிட்டோர் பங்கேற்றனர். இந்த சமத்துவ பொங்கல் நிகழ்வில் அனைத்து மதத்தைச் சேர்ந்த பொதுமக்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இதில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், திருமதி துர்கா ஸ்டாலின் ஆகியோர் பொங்கல் வைத்து மகிழ்ந்து இவ்விழாவில் பங்கேற்ற அனைத்து மதத்தைச் சேர்ந்தவர்களுக்கும் பொங்கல் வழங்கி பொங்கல் வாழ்த்து தெரிவித்தனர்.

**பொங்கல் பரிசுப் பொருள்கள்!**

அத்துடன் இந்த பொங்கல் விழாவில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 1000–க்கும் மேற்பட்ட மாணவியர் மற்றும் மகளிருக்கு பொங்கல் பரிசுப் பொருள்களை வழங்கி வாழ்த்து தெரிவித்தார். இந்த பரிசு பொருள்களில் வேட்டி, சேலை, பொங்கல் வைப்பதற்கான பொருள்கள் உள்ளிட்டவை இடம்பெற்றிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொளத்தூர் சட்டமன்ற தொகுதி அலுவலகம் அருகே உள்ள அனிதா அச்சீவர்ஸ் அகாடமியில் நடைபெற்ற சமத்துவப் பொங்கல் விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், திருமதி துர்கா ஸ்டாலின் ஆகியோர் கலந்து கொண்ட நிகழ்ச்சியில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு அனிதா அச்சீவர்ஸ் அகாடமி மாணவிகள் மற்றும் பொதுமக்கள் பூக்கோலமிட்டு உற்சாகமாக வரவேற்றனர்.

முன்னதாக அனிதா அச்சீவர்ஸ் அகாடமியில் புதுப்பானையில் பச்சரிசி இட்டு அங்கு பயிலும் மாணவிகளுக்கு முதல்வர் அவர்களும், அவரது மனைவி துர்கா ஸ்டாலின் அவர்களும் பொங்கல் பரிசு வழங்கி வாழ்த்து தெரிவித்தனர். பரிசுப் பொருட்களைப் பெற்றுக் கொண்ட மாணவிகள் முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்தனர்.

**2,100 பேருக்கு பொங்கல் பரிசுப் பொருட்கள்!**

அதேபோல் சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளரும், அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே. சேகர்பாபு ஏற்பாட்டில் டான்போஸ்கோ பள்ளியில் 2 ஆயிரத்து 100 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இப்பொங்கல் விழாவில், மேயர் பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, கிரிராஜன் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, வெற்றியழகன், ஜோசப் சாமுவேல் மற்றும் தி.மு.க. பகுதி நிர்வாகிகளுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பரிசுப் பொருட்களை வழங்கினார்.

முன்னதாக, பொங்கல் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் பங்கேற்கச் சென்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு சாலையின் இருபுறமும் பொதுமக்கள் திரண்டு நின்று உற்சாக வரவேற்பு அளித்தனர். அப்போது முதலமைச்சரிடம் பொதுமக்கள் மனு அளித்தனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சென்னை மாநகராட்சி மேயர் ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மரு. கலாநிதி வீராசாமி, கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் ப.தாயகம் கவி, வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப. ரங்கநாதன், துணை மேயர் மு. மகேஷ் குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் அனிதா அச்சீவர்ஸ் அகாடமி நிர்வாகிகள் திருமதி ஹெலன் மற்றும் நரேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### பொங்கல் திருநாளை முன்னிட்டு 1 லட்சத்து 12 ஆயிரத்து 675

## போக்குவரத்துக் கழகப் பணியாளர்களுக்கு சாதனை ஊக்கத்தொகை!

### தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

*சென்னை, ஜன.13-*

*“பொங்கல்” திருநாளை முன்னிட்டு 1 லட்சத்து 12 ஆயிரத்து 675 பேருக்கு 6 கோடியே 75 லட்சத்து 73 ஆயிரம் ரூபாய் சாதனை ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.*

*இதுகுறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு வருமாறு:-*

*பொங்கல் திருநாளை முன்னிட்டு ஒரு இலட்சத்து பன்னிரெண்டாயிரத்து அறுநூற்று எழுபத்தைந்து போக்குவரத்துக் கழகப் பணியாளர்களுக்கு ரூபாய் ஆறு கோடியே எழுபத்தைந்து இலட்சத்து எழுபத்து மூன்றாயிரம் சாதனை ஊக்கத்தொகை வழங்கப்படும்.*

*தமிழ்நாட்டில் சிறப்பான மற்றும் திறமையான போக்குவரத்து சேவையை பொதுமக்களுக்கு அளிப்பதில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் முக்கிய பங்காற்றுகின்றன. இந்தியாவிலேயே தமிழகத்தில் இயங்கும் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகங்கள் தான் பயணிகள் அடர்வு, பேருந்து பயன்பாடு, எரிபொருள் செயல்திறன் ஆகியவற்றில் உயர்ந்து விளங்குகின்றன.*

*குக்கிராமம் முதல் மாநகரங்கள் உட்பட மக்கள் குடியிருக்கும் அனைத்துப் பகுதிகளுக்கும் தங்கு தடையின்றி, போக்குவரத்து சேவை அளிக்கப்பட்டு வருகின்றது. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம், பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக் குழு ஆகிய அனைத்து நிறுவனங்களிலும் தற்போது சுமார் ஒரு இலட்சம் பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றார்கள்.*

*பொங்கல் திருநாளை முன்னிட்டு தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம், பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக் குழு ஆகியவற்றில் பணிபுரியும், பணியாளர்களில், 2023ஆம் ஆண்டில் 91 நாட்கள் மற்றும் அதற்கு மேலும், ஆனால் 151 நாட்களுக்கும் குறைவாக பணிபுரிந்த ஊழியர்களுக்கு 85 ரூபாய் வீதமும்; 151 நாட்கள் மற்றும் அதற்கு மேலும் ஆனால் 200 நாட்களுக்கும் குறைவாக பணிபுரிந்த ஊழியர்களுக்கு 195 ரூபாய் வீதமும், 200 நாட்கள் மற்றும் அதற்கு மேலும் பணிபுரிந்த ஊழியர்களுக்கு 625 ரூபாய் வீதமும் பொங்கல் “சாதனை ஊக்கத் தொகை” வழங்கப்படும்.*

*இந்த உத்தரவின்படி, அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் ஒரு இலட்சத்து பன்னிரெண்டாயிரத்து அறுநூற்று எழுபத்தைந்து போக்குவரத்துக் கழகப் பணியாளர்களுக்கு ரூபாய் ஆறு கோடியே எழுபத்தைந்து இலட்சத்து எழுபத்து மூன்றாயிரம் சாதனை ஊக்கத்தொகை வழங்கப்படும்.*

*இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.*

### துணைவேந்தர் ஜெகநாதன் மீதான முறைகேடு!

## பெரியார் பல்கலையில் காவல்துறை மீண்டும் சோதனை!

*சேலம், ஜன. 13-*

*துணைவேந்தர் ஜெகநாதன் மீதான முறைகேடு விவகாரத்தில் பெரியார் பல்கலைக்கழகத்தில் காவல்துறையினர் மீண்டும் சோதனை நடத்தினர்.*

*சேலம் பெரியார் பல்கலைக்கழக துணைவேந்தர் ஜெகநாதன், பல்கலைக்கழக நிர்வாகத்தில் பல்வேறு முறைகேடுகள் செய்ததாக குற்றச்சாட்டு எழுந்தது. குறிப்பாக, போலி ஆவணங்கள் தயாரித்து தனியார் நிறுவனங்களிடம் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்ததாக புகார் எழுந்தது.*

*இதுகுறித்து பல்கலைக்கழகத்தின் சட்ட ஆலோசகர் இளங்கோவன் அளித்த புகாரின் பேரில் வழக்குப்பதிவு செய்த காவல்துறையினர், ஜெகநாதனை கைது செய்தனர். ஆனால், தற்போது அவர் ஜாமீனில் உள்ளார்.*

*இந்நிலையில், வழக்கு தொடர்பாக பெரியார் பல்கலைக்கழகத்தில் காவல் துறையினர் சோதனை நடத்தி முக்கிய ஆவணங்களை கைப்பற்றினர்.*

*இந்நிலையில் பெரியார் பல்கலைக்கழகத்தில் காவல்துறையினர் நேற்று முன்தினம் மீண்டும் சோதனை நடத்தினர். பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள 6 இடங்களில் 30க்கும் மேற்பட்ட காவல்துறை யினர் சோதனையில் ஈடுபட்டனர். பெரியார் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற முறைகேடு வழக்கு தொடர்பாக ஏற்கனவே 7 இடங்களில் சோதனை நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.*

### ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவுடன்

## தமிழ்நாடு அனைத்துக் கட்சி எம்.பி.க்கள் இன்று சந்திப்பு!

### கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. தலைமையில் செல்லும் இக்குழு தமிழ்நாட்டிற்கு வெள்ள நிவாரணம் வழங்க வலியுறுத்துகிறது!

*சென்னை, ஜன.13-*

*ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவை தமிழ்நாடு அனைத்துக்கட்சி குழுவினர் இன்று (13.1.2024 சனிக்கிழமை) சந்திக்க உள்ளனர். தமிழ்நாடு அரசு கோரிய 37 ஆயிரத்து 907கோடி ரூபாய் வெள்ள நிவாரண தொகையை உடனடியாக வழங்குமாறு அவர்கள் வலியுறுத்த உள்ளனர்.*

*சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய வட மாவட்டங்களில் கடந்த டிசம்பர் மாதம் 3,4 ஆகிய தேதிகளில் மிக்ஜாம் புயல் காரணமாக அதி கனமழை வெளுத்து வாங்கியது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் சென்னை மாவட்டத்தில் உள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் தலா 6 ஆயிரம் ரூபாய் நிவாரணத் தொகையை தமிழ்நாடு அரசு வழங்கியது. மற்ற மூன்று மாவட்டங்களில் பாதிப்புகளை சந்தித்த வட்டங்களில் மட்டும் நிவாரணத் தொகை வழங்கப்பட்டது.*

*இதேபோல், நெல்லை, தூத்துக்குடி, தென்காசி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் கடந்த டிசம்பர் 17 மற்றும் 18ம் தேதி ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் குடியிருப்புகளுக்குள் தண்ணீர் சென்று பெரும் பாதிப்பு ஏற்பட்டது. வெள்ள சேதங்களை பார்வையிட நெல்லை சென்ற முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அதிக பாதிப்புள்ள இடங்களுக்கு 6 ஆயிரம் ரூபாயும், குறைந்த பாதிப்புள்ள பகுதிகளுக்கு ஆயிரம் ரூபாயும் நிவாரணம் வழங்கப்படும் என அறிவித்தார். இதனைத் தொடர்ந்து கடந்த டிசம்பர் 19ம் தேதி டெல்லி சென்ற முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், பிரதமர் மோடியை சந்தித்து, தமிழ்நாட்டின் கனமழை, வெள்ளத்தால் வட மாவட்டங்கள், தென் மாவட்டங்கள் அடுத்தடுத்து பாதிக்கப்பட்டிருப்பதை இயற்கை பேரிடராக அறிவிக்க வேண்டும் என வலியுறுத்தினார்.*

*மிக்ஜாம் புயல் வெள்ளத்தால் ஏற்பட்ட பாதிப்பை சீர் செய்ய கோரியபடி, தற்காலிக நிவாரணமாக 7ஆயிரத்து 33 கோடி ரூபாயும், நிரந்தர நிவாரண தொகையாக 12ஆயிரத்து 659 கோடி ரூபாயும் வழங்குமாறும் முதலமைச்சர் கோரிக்கை விடுத்தார். இதனைத் தொடர்ந்து தமிழ்நாடு அரசு கோரிய வெள்ள நிவாரணத்தொகையை உடனடியாக வழங்க வலியுறுத்தி, அனைத்துக் கட்சி எம்.பிக்கள், ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவை சந்தித்து வலியுறுத்துவார்கள் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்திருந்தார்.*

*இந்நிலையில், ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவை தமிழ்நாடு அனைத்துக்கட்சிக்குழு வருகிற சனிக்கிழமை சந்திக்க உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவர் டி.ஆர். பாலு தலைமையிலான இக்குழுவில், காங்கிரஸ் சார்பில் ஜெயகுமார், ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சுப்பராயன் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் நடராஜன், விடுதலைச்சிறுத்தைகள் கட்சியின் ரவிகுமார், முஸ்லீம் லீக் கட்சியின் நவாஸ் கனி, கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சியின் சின்ராஜ் ஆகியோர் இடம்பெறுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

## சென்னை - கோவை இடையே சிறப்பு ரயில்!

சென்னை, ஜன. 13–

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு சென்னை – கோவை இடையே சிறப்பு ரயில் இயக்கப்படும் என தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது. பொங்கல் பண்டிகையை சொந்த ஊர்களில் கொண்டாட செல்லும் பொதுமக்கள் வசதிக்காக சிறப்பு பஸ்கள், ரயில்கள் அறிவிக்கப்பட்டு உள்ளன.

இதுகுறித்து தெற்கு ரயில்வே வெளியிட்ட அறிக்கை வருமாறு:–

பொங்கல் பண்டிகை முன்னிட்டு பயணிகளின் வசதிக்காக சிறப்பு ரயில் இயக்கப்படுகிறது. அதன்படி சென்னை – கோவை – சென்னை இடையே சிறப்பு ரயில் இயக்கப்படுகிறது. அதன்படி ஜன.16, 17ம் தேதிகளில் கோயம்புத்தூரில் இருந்து தாம்பரத்திற்கு இயக்கப்படும் சூப்பர் பாஸ்ட் சிறப்பு ரயில் (எண்.06086) இரவு 8.45 மணிக்கு புறப்பட்டு மறுநாள் அதிகாலை 5.20 மணிக்கு தாம்பரம் வந்து சேருகிறது. தாம்பரத்தில் இருந்து 17, 18ம் தேதிகளில் இயக்கப்படும் சிறப்பு ரயில் காலை 7.30 மணிக்கு புறப்பட்டு மாலை 4.30 மணிக்கு கோயம்புத்தூர் சென்றடைகிறது.

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 13-01-2024

# பழனிசாமியின் ஓரங்க நாடகம்

தனது நாற்காலியைக் காப்பாற்றிக் கொள்ள சிறுபான்மைச் சமூகத்துக்குத் தொடர்ந்து துரோகம் இழைத்து பா.ஜ.க.வின் பாதம் தாங்கியாகச் செயல்பட்ட பழனிசாமி, இப்போது சிறுபான்மையினரின் காவலராகக் காட்ட முயற்சித்து தனது துரோக நாடகத்தின் அடுத்த அத்தியாயத்தை நடத்திக் காட்டி வருகிறார்.

“அ.தி.மு.க. சிறுபான்மையினரை அரண் போல காத்து வருகிறது. அ.தி.மு.க. ஆட்சியில் சிறுபான்மையினருக்கு எதிரான நடவடிக்கைகள் இரும்புக் கரம் கொண்டு அடக்கப்பட்டன. இசுலாமியர்களுக்காக நிறைய திட்டங்களைத் தீட்டி இருக்கிறோம். நாட்டு மக்களுக்காக சூழ்நிலை கருதி பா.ஜ.க.வுடன் கூட்டணி வைத்தோம். இனி பா.ஜ.க.வுடன் அ.தி.மு.க. கூட்டணி வைக்காது. கூட்டணி வேறு, கொள்கை வேறு என்பதில் உறுதியாக இருக்கிறோம். கூட்டணியில் இருந்து வெளியே வந்த போதிலும் முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள், அ.தி.மு.க.வையும் பா.ஜ.க.வையும் தொடர்புபடுத்திப் பேசி வருகிறார். எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலிலும், சட்டமன்றத் தேர்தலிலும் பா.ஜ.க.வுடன் கூட்டணி இல்லை என்று திட்டவட்டமாக அறிவிக்கிறேன். சிறுபான்மை மக்கள் அ.தி.மு.க.வுக்கு ஆதரவு தர வேண்டும்” இதுதான் எஸ்.டி.பி.ஐ. கட்சியின் மாநாட்டில் பழனிசாமி பேசியது ஆகும்.

இனி வருங்காலத்தில் பா.ஜ.க.வுடன் கூட்டணி இல்லை என்று சொல்லிக் கொள்ளும் பழனிசாமி, அந்த மாநாட்டில் பா.ஜ.க.வை விமர்சித்து ஏதாவது பேசினாரா என்றால் இல்லை. சிறுபான்மையினர் நடத்தும் மாநாட்டில் கலந்து கொண்ட பழனிசாமி, சிறுபான்மை இனத்துக்கு பா.ஜ.க. செய்த துரோகங்களைப் பட்டியல் போட்டாரா என்றால் இல்லை. மொத்தமும் தி.மு.க.வையும் முதலமைச்சரையும், கழக ஆட்சியையும்தான் விமர்சித்துப் பேசி விட்டு, ‘பா.ஜ.க.வுடன் கூட்டணி இல்லை’ என்பதை மட்டும் சொல்லி சிறுபான்மை இனத்தை ஏமாற்றப் பார்த்திருக்கிறார்.

**பா.ஜ.க.வுடன் கூட்டணி இல்லை என்று சொல்வது பழனிசாமியின் தற்காலிக நாடகங்களில் ஒன்று. சிறுபான்மையின வாக்குகளை உடைப்பதற்காக பா.ஜ.க.வால் உருவாக்கப்பட்ட சதிச் செயலின் பிரதிநிதிதான் பழனிசாமி என்பதை அ.தி.மு.க.வினரே அறிவார்கள். உள்ளார்ந்த ஈடுபாட்டுடன் பா.ஜ.க.வுடன் கூட்டணி இல்லை என்ற முடிவை எடுத்திருந்தால் அவர் பா.ஜ.க.வை விமர்சித்திருக்க வேண்டும். பா.ஜ.க.வின் தொங்கு சதையான பழனிசாமி அந்தக் காரியத்தை எப்படிச் செய்வார்?**

**சூழ்நிலை கருதி பா.ஜ.க.வுடன் கூட்டணி வைத்தாராம்? என்ன சூழ்நிலை? மக்களுக்காக கூட்டணி வைத்தாரா? தனது நாற்காலியைக் காப்பாற்றிக் கொள்வதற்காக பா.ஜ.க.வின் பாதம் தாங்கினார். பா.ஜ.க. செய்த செயல்கள் அனைத்தையும் கைகட்டி வரவேற்றார். குடியுரிமை திருத்தச் சட்டத்தை ஆதரித்ததை விட அவர் சிறுபான்மையினருக்கு இழைத்த பெரிய துரோகம் வேண்டுமா?**

மாநிலங்களவையில் குடியுரிமைச் சட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தவர்கள் : -

அ.தி.மு.க. எம்.பி.க்கள்:

1. SR பாலசுப்பிரமணியன்
2. N சந்திரசேகரன்
3. A முகமது ஜான்
4. AK முத்துக்கருப்பன்
5. A நவநீதகிருஷ்ணன்
6. R சசிகலா புஷ்பா
7. AK செல்வராஜ்
8. R. வைத்திலிங்கம்
9. A. விஜயகுமார்
10. விஜிலா சத்யநாத்

பா.ம.க. எம்.பி.:

11. அன்புமணி ராமதாஸ்

- இவர்களால்தான் சிறுபான்மையினருக்கு எதிரான குடியுரிமைச் சட்டம் மாநிலங்கள் அவையில் நிறைவேறியது. அதாவது ஆதரித்தவர்கள் 125 பேர். எதிர்த்து வாக்களித்தவர்கள் 105 பேர். அன்புமணி மற்றும் அந்த 10 அ.தி.மு.க. எம்.பி.க்களின் ஓட்டுதான் குடியுரிமைச் சட்டம் நிறைவேறக் காரணம்.

அந்த 11 பேரும் எதிர்த்து வாக்களித்திருந்தால்

ஆதரவு 125-11=114 ஆக குறைந்திருக்கும்.

எதிர்ப்பு 105+11=116 என்று உயர்ந்திருக்கும்.

எதிர்த்தவர்கள் 116 பேர் என்றும்

ஆதரித்தவர்கள் 114 பேர் என்றும் வந்திருக்கும். குடியுரிமைச் சட்டம் தோற்கடிக்கப்பட்டிருக்கும்.

116 க்கும் 114 என்ற கணக்கில் CAA சட்டம் தோற்கடிக்கப்பட்டிருக்கும். இந்தப் பித்தலாட்டத்தைச் செய்த பழனிசாமி தான் இன்று சிறுபான்மையர்க்கு ஆதரவாக நாடகம் ஆடுகிறார்.

குடியுரிமைச் சட்டமானது இசுலாமியர் உள்ளிட்ட சிறுபான்மையினரையும், ஈழத்தமிழர்களையும் மட்டுமல்ல; இங்குள்ள தமிழர்களுக்கும் அச்சுறுத்தல் ஏற்படுத்தப்போகும் சட்டம் என்பதால் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் தி.மு.க. சார்பில் கடுமையாக எதிர்க்கப்பட்டது. மாபெரும் போராட்டங்கள் நடத்தப்பட்டன. மக்களிடம் கையெழுத்து இயக்கம் நடத்தப்பட்டது. கோடிக்கணக்கான கையெழுத்துக்களுடன் குடியரசுத் தலைவரையே சந்தித்து வழங்கப்பட்டது. அப்போது பழனிசாமி என்ன சொன்னார்? ‘யாருமே பாதிக்கப் படவில்லையே’ என்று கேட்டார். சட்டமன்றத்தில் 2021 பிப்ரவரி 20 ஆம் தேதி, குடியுரிமைச் சட்டத்துக்கு ஆதரவாக பெரிய வகுப்பு எடுத்தார் பழனிசாமி.

ஆட்சி மாறியது. 2021 செப்டம்பர் 8 அன்று, ‘நாட்டின் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் கேள்விக்குறியாக்கும் ஒன்றிய அரசின் குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை திரும்பப் பெற வேண்டும்’ என்று சட்டமன்றத்தில் தனித் தீர்மானத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொண்டு வந்தார்கள். இந்த தனித் தீர்மானத்தை சட்டமன்றத்துக்குள் இருந்து அ.தி.மு.க. ஆதரித்திருக்க வேண்டும். அல்லது தீர்மானத்தை எதிர்த்திருக்க வேண்டும். இரண்டையும் செய்யவில்லை. வேறு ஒரு காரணத்தைச் சொல்லி முன்னதாகவே வெளிநடப்பு நாடகத்தை நடத்தி வெளியேறி விட்டார்கள். இதுதான் இவர்கள் பா.ஜ.க.வை எதிர்க்கும் லட்சணம்.

‘ஓ.பன்னீர்செல்வம் இருந்து பா.ஜ.க.வை ஆதரிக்க கட்டாயப்படுத்தினார்’ என்பது உண்மையானால், இப்போது தான் பன்னீர்செல்வம் தனியாகப் போய்விட்டாரே. அதன்பிறகும் ஏன் குடியுரிமைச் சட்டத்தை எதிர்க்கத் தயங்கினார் பழனிசாமி? ஏனென்றால், இப்போது நடத்துவதும் பா.ஜ.க. போட்டுத் தந்த ‘ஓரங்க நாடகம்’ தான் என்பதால்!

●●



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (11.1.2024) முகாம் அலுவலகத்தில், சிங்கப்பூர் நாட்டு உள்துறை மற்றும் சட்டத் துறை அமைச்சர் கே.சண்முகம் சந்தித்துப் பேசினார். இச்சந்திப்பின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சிங்கப்பூர் நாட்டு துணைத் தூதர் எட்கர் பெங்க் (Edgar Pang), உதவி இயக்குநர் ஷான் லிம் யங் சென், முதுநிலை மேலாளர் சுரேந்திரன் ஆகியோர் உடனிருந்தனர்.

## ஆப்கனில் 6.1 ரிக்டரில் நிலநடுக்கம்!

*புதுடெல்லி: ஜன. 13-*

*ஆப்கானிஸ்தானில் நேற்று முன்தினம் மதியம் 2:50 மணி அளவில் பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நில நடுக்கத்தின் அதிர்வு, டெல்லி வரை உணரப்பட்டதால் மக்கள் அதிர்ச்சியுற்றனர்.*

*நிலநடுக்கத்துக்கான தேசிய மையத்தின் தகவல் படி, ஆப்கானிஸ்தானில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மதியம் 2:50 மணி அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் டெல்லி, காசியாபாத், நொய்டா, பரிதாபாத், குருகிராம், காஷ்மீர் உள்ளிட்ட இடங்களில் உணரப்பட்டதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 6.1 என பதிவாகியுள்ளது.*



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (11.1.2024) முகாம் அலுவலகத்தில், பேரூர் ஆதீனம் தவத்திரு சாந்தலிங்க அடிகளார், சிரவை ஆதீனம் தவத்திரு குமரகுருபர சுவாமிகள் மற்றும் மயிலம் பொம்மபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் ஆகியோர் சந்தித்து தலா 5 இலட்சம் ரூபாய் வீதம், மொத்தம் 15 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு வழங்கினார்கள். உடன் அமைச்சர் பி.கே. சேகர்பாபு உள்ளார்.

### கல்வி - பண்பாடு - தொழில் என பல்வேறு தளங்களில்

# தமிழ்நாட்டின் வளர்ச்சிக்குப் பயனளிக்கும்!

## சிங்கப்பூர் அமைச்சர் கே.சண்முகம் சந்திப்பு குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் கருத்து!

சென்னை, ஜன.13-

அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை சார்பில் ‘தமிழ் வெல்லும்’ என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு இரண்டு நாட்கள் நடைபெறும் “அயலகத் தமிழர் தினம் 2024” விழாவை நேற்று முன்தினம் (11.1.2024) நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

அயலகத் தமிழர் தின விழாவின் இரண்டாவது நாளான நேற்று (12.1.2024) தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அயலகத் தமிழர்களுக்கான விருதுகளை வழங்கி, ‘எனது கிராமம்’ என்ற முன்னோடித் திட்டத்தை தொடங்கி வைத்து, சிறப்புரையாற்றினார்.

இவ்விழாவில் தலைமை விருந்தினராக கலந்து கொள்ள வருகை தந்துள்ள சிங்கப்பூர் நாட்டின் சட்டம் மற்றும் உள்துறை அமைச்சர் கே. சண்முகம் அவர்கள் நேற்று முன்தினம் (11.1.2024) முகாம் அலுவலகத்தில் முதலமைச்சர் அவர்களை சந்தித்துப் பேசினார்.

*இச்சந்திப்பு தொடர்பாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-*

**சென்ற ஆண்டு சிங்கப்பூர் பயணத்தின்போது நான் விடுத்த அழைப்பை ஏற்று, அயலகத் தமிழர் தின விழாவில் பங்கேற்கத் தமிழ்நாட்டுக்கு வந்துள்ள சிங்கப்பூர் நாட்டின் சட்டம் மற்றும் உள்துறை அமைச்சர் கே. சண்முகம் அவர்களை எனது இல்லத்தில் வரவேற்று மகிழ்ந்தேன்.**

**உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024-இன் வெற்றியைத் தொடர்ந்து நடைபெற்றுள்ள எங்களின் இந்தச் சந்திப்பு கல்வி - பண்பாடு - தொழில் எனப் பல்வேறு தளங்களில் வளர்ந்து, நாட்டுக்கும், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும் பயனளிக்கும் என நம்புகிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

### ஊழல் - முறைகேடு புகார்களுக்குள்ளான பல்கலை துணைவேந்தர் ஜெகநாதனைச் சந்திக்க

# ஆர்.என்.ரவியின் சேலம் வருகையைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்!

## மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பினர் கறுப்புக் கொடியேந்தி கண்டன முழக்கம்!

*சேலம், ஜன.13-*

*ஆளுநர் ஆர்.என்.ரவியின் சேலம் வருகையைக் கண்டித்து தமிழ்நாடு மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு சார்பில் கருப்புக்கொடி ஏந்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.*

*சேலம் பல்கலைக்கழக துணைவேந்தர் ஜெகநாதன் மீது பல்வேறு முறைகேடு புகார்கள் எழுந்துள்ளன. இது தொடர்பாக கைது செய்யப்பட்ட இவர், தற்போது நிபந்தனை ஜாமீனில் உள்ளார். இந்நிலையில், பெரியார் பல்கலைக்கழக கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பங்கேற்க வந்த ஆளுநர் ஆர்.என்.ரவியை துணைவேந்தர் ஜெகநாதன் வரவேற்றார். இதனால் பல்வேறு சந்தேகங்கள் எழுந்துள்ளன.*

*துணைவேந்தர் மீது பல்வேறு ஊழல் மற்றும் முறைகேடு குற்றச்சாட்டு இருக்கும் நிலையில் அவரை ஆளுநர் சந்தித்தது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. சாட்சியங்களைக் கலைக்கவும், முறைகேடு புகாரில் சிக்கியுள்ள துணைவேந்தரைக் காப்பாற்றவும் ஆளுநர் முயற்சிப்பதாக கூறப்படுகிறது. நிபந்தனை ஜாமீனில் உள்ள துணைவேந்தரை ஆளுநர் சந்திக்க வேண்டிய கட்டாயம் என்ன என்றும், அவரை துணைவேந்தர் பதவியில் இருந்து நீக்காதது ஏன் என்றும் பல்வேறு தரப்பினரும் கேள்வி எழுப்பியுள்ளனர்.*

*ஆளுநர் ஆர்.என்.ரவியின் சேலம் வருகையைக் கண்டித்து தமிழ்நாடு மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு சார்பில் கருப்புக்கொடி ஏந்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அப்போது, கண்டன முழக்கங்களும் எழுப்பப்பட்டன.*

*இந்த ஆர்ப்பாட்டத்தில் தி.மு.க. மாணவர் அணியினர், திராவிடர் கழக மாணவர் அமைப்பினர், அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம், இந்திய மாணவர் சங்கம், விடுதலைச் சிறுத்தைகளின் மாணவர் அமைப்பு, காங்கிரஸ் மாணவர் இயக்கம் உள்ளிட்ட அமைப்புகளைச் சேர்ந்த ஏராளமானோர் கலந்து கொண்டனர்.*

*பெரியார் பல்கலைக்கழக வரலாற்றில் இது போன்று ஆளுநர் வருகையின் பொழுது ஒட்டு மொத்த மாணவர் அமைப்பினரும் போராட்டத்தில் ஈடுபடுவது இதுவே முதல் முறையாகும்.*

*இதனிடையே, போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களை காவல்துறையினர் கைது செய்தனர்.*



நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு திருச்சிராப்பள்ளி மாவட்டம், இலால்குடி வட்டம், புள்ளம்பாடி ஊராட்சி ஒன்றியம், வந்தலை கூடலூரில் ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் நபார்டு திட்டத்தின் கீழ் ரூபாய் 4.03 கோடி மதிப்பீட்டில் வந்தலை கூடலூர் வந்தலை சாலையில் 1.4 கி.மீ தூரம் வரை பாலம் கட்டும் பணியினை அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப் குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் அ.சௌந்தர பாண்டியன், நா.தியாகராஜன், எம்.பழனியாண்டி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் தேவநாதன், மாவட்ட ஊராட்சி தலைவர் த.ராஜேந்திரன், புள்ளம்பாடி ஒன்றிய குழுத்தலைவர் திருமதி. ரசியாகோல்டன் ராஜேந்திரன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.1.2024) கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் அருகில் நடைபெற்ற பொங்கல் விழாவில் 1000 மாணவிகள் மற்றும் மகளிருக்கு பொங்கல் பரிசுப் பொருட்களை வழங்கினார். உடன் திருமதி. துர்கா ஸ்டாலின், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மரு. கலாநிதி வீராசாமி, கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் ப.தாயகம் கவி, அ.வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப.ரங்கநாதன், துணை மேயர் மு.மகேஷ்குமார், ஐ.சி.எஃப். வ.முரளிதரன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அனிதா அச்சீவர்ஸ் அகாடமி நிர்வாகிகள் திருமதி ஹெலன் மற்றும் நரேந்திரன் ஆகியோர் உள்ளனர்.

## விழுப்புரம் வடக்கு மாவட்டம்

# தகவல் தொழில்நுட்ப அணி - அனைத்து அணிகளின் பயிற்சி வகுப்பு!

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் அறிவிப்பு!



விழுப்புரம், ஜன. 13 -

விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளர், அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் தலைமைக் கழக அறிவிப்பின்படி இன்று (13.1.2024 சனிக்கிழமை) செஞ்சி, திண்டிவனம் சாலையில் உள்ள தனலட்சுமி திருமண மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தகவல் தொழில்நுட்ப அணி உள்ளிட்ட அனைத்து அணிகளின் பயிற்சி வகுப்பு நடைபெறுகிறது.

இப்பயிற்சி வகுப்பில் விழுப்புரம் வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர்க் கழகச் செயலாளர் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், நகரமன்ற, பேரூராட்சி மன்றத் தலைவர்கள், துணைத் தலைவர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட இளைஞரணி, மாணவரணி, தகவல் தொழில்நுட்ப அணி, மருத்துவ அணி, மகளிர் அணி, தொண்டர் அணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, பொறியாளர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி ஆகிய கழக சார்பு அணிகள், மாவட்ட நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## விழுப்புரம் தெற்கு மாவட்டம்

# தகவல் தொழில்நுட்ப அணி பயிற்சி வகுப்பு!

### மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ. அறிவிப்பு!



விழுப்புரம், ஜன. 13 -

விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

விழுப்புரம் தெற்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி முன்னெடுப்பில் பயிற்சி வகுப்பு கூட்டம் விழுப்புரம் தெற்கு மாவட்டத்தில் இன்று (13.01.2024 சனிக்கிழமை) காலை 9 மணி அளவில் விழுப்புரம் கலைஞர் அறிவாலயம் தளபதி அரங்கத்தில் மாவட்ட அளவிலான சமூக ஊடகங்களுக்கான பயிற்சி வகுப்பு கூட்டம் நடைபெறுகிறது. இக்கூட்டத்தில் கழக இளைஞர் அணி, மாணவர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, தொண்டர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, தொழிலாளர் அணி, ஆதிதிராவிடர் நலக் குழு அணி, வழக்கறிஞர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, வர்த்தகர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, ஓட்டுநர் அணி, நெசவாளர் அணி ஏனைய கழக சார்பணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர்க் கழகச் செயலாளர்கள் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# சமூக ஊடகங்களுக்கான பயிற்சி வகுப்பு!

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!



கடலூர் கிழக்கு மாவட்டத்தில் தலைமைக் கழக அறிவிப்பின்படி இன்று (13.01.2024 - சனிக்கிழமை) வடலூர், மங்கையர்க்கரசி திருமண மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் சமூக ஊடகங்களுக்கான பயிற்சி வகுப்பு நடைபெறுகிறது.

அதுசமயம், கடலூர் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த, மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர மேயர், நகரமன்ற, பேரூராட்சிமன்ற தலைவர்கள், துணைத்தலைவர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட இளைஞர் அணி, மாணவர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, மருத்துவ அணி, மகளிர் அணி, தொண்டர் அணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, பொறியாளர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி ஆகிய கழக சார்பு அணிகளின் மாவட்ட நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்,**
செயலாளர், கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.1.2024) கொளத்தூர், டான் பாஸ்கோ பள்ளி வளாகத்தில் நடைபெற்ற பொங்கல் விழாவில், 2100 பயனாளிகளுக்கு பொங்கல் பரிசுப் பொருட்களை வழங்கினார். இவ்விழாவில், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மரு. கலாநிதி வீராசாமி, கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் ப.தாயகம் கவி, அ.வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப.ரங்கநாதன், துணை மேயர் மு. மகேஷ்குமார், பகுதிக் கழகச் செயலாளர்கள் நாகராஜன், ஐசிஎஃப் முரளி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## இதுவரை ரூ.5 கோடியே 91 இலட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது!

### 2012 ஜூன் மாதம் முதல் உதவித் தொகை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும்

### 2013 ஆகஸ்ட் மாதத்திலிருந்து ரூ. 25 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது!

# கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில்

# நலிந்தோர் மருத்துவம் - கல்வி உதவி நிதியாக

# இன்று ரூ.2,00,000/- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளைக்காக, தலைவர் கலைஞர் அவர்கள் தனது சொந்த பொறுப்பில் அளித்த ஐந்து கோடி ரூபாயினை வங்கியில் வைப்பு நிதியாக போடப்பட்டு, அதில் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு, மாதந்தோறும் ஏழை எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகையாக 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப்பட்டு வருகிறது.

வைப்பு நிதியாக போடப்பட்ட ஐந்து கோடி ரூபாயில், 30வது புத்தகக் கண்காட்சியினை 10.1.2007 அன்று திறந்து வைத்து தலைவர் கலைஞர் பேசுகையில், கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர்–பதிப்பாளர் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என அறிவித்து அச்சங்கத்துக்கு வழங்கியது போக மீதமுள்ள நான்கு கோடி ரூபாயிலிருந்து வரும் வட்டித் தொகையில் 2007 பிப்ரவரி முதல் தொடர்ந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2005 நவம்பர் முதல் இதுவரை வழங்கிய நிதி ரூ. 5 கோடியே 91 லட்சத்து 90 ஆயிரம். இந்த மாதம் மருத்துவம் மற்றும் கல்வி உதவி நிதியாக மொத்தம் **8** பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் ரூ.2,00,000/– (இரண்டு லட்சம்) 11–01–2024 அன்று கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** வழங்கினார். நிதி பெறுவோர் வெளி மாவட்டங்களிலிருந்து வந்துபோகிற செலவினத்தை தவிர்ப்பதற்காக தபால் மூலம் வரைவுக் காசோலையாக அனுப்பப்படுகிறது.

## நிதி உதவி பெறுவோர் விவரம்

| | | |
|---|---|---|
| 1. | பொன். சேதுமாதவன், காந்தி தெரு, பெரியப்பணிச்சேரி, சென்னை – 128 | 25,000/– |
| 2. | திருமதி மு.ஜீவா, வடக்கு கள்ளர் தெரு, பிச்சாண்டார்கோவில், திருச்சி | 25,000/– |
| 3. | வேதா.உதயசூரியன், அபில்லாக் குறுக்கு தெரு, திருவல்லிக்கேணி, சென்னை | 25,000/– |
| 4. | எம். கந்தசாமி, அகரசாத்தங்குடி, மாங்குடி அஞ்சல், திருவாரூர் – 610 103. | 25,000/– |
| 5. | திருமதி ஜி.முனீஸ்வரி, பாவடி தோப்பு தெரு, சக்கம்பட்டி, ஆண்டிப்பட்டி, தேனி | 25,000/– |
| 6. | எஸ்.ராதாகிருஷ்ணன், ஒன்றிய பிரதிநிதி, மருதங்குடி, கள்ளிக்குடி, மதுரை | 25,000/– |
| 7. | எஸ்.வீரமுத்து, கிழக்கு கொமரலிங்கம், மடத்துக்குளம், திருப்பூர் மாவட்டம். | 25,000/– |
| 8. | வி.சஞ்சய், புளுவப்பட்டி, அம்மன் நகர், கோவை – 641 602. | 25,000/– |
| | **மொத்தம்** | **ரூ.2,00,000/-** |



புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், திருவரங்குளத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில், ஏழைப் பெண்களுக்கு திருமண நிதியுதவி மற்றும் தாலிக்கு தங்கத்தினை, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ஐ.சா.மெர்சி ரம்யா, தலைமையில் 10.01.2024 அன்று வழங்கினார். உடன் புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், திருவரங்குளம் ஒன்றியக் குழுத் தலைவர் திருமதி.வள்ளியம்மை தங்கமணி, மாவட்ட சமூகநல அலுவலர் செல்வி.க.ந.கோகுலப்பிரியா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



நீலகிரி மாவட்டம், குன்னூரில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் சார்பில் ஏழை, எளிய மக்களுக்கு ஆன்லைன் வீட்டுமனை பட்டாவினையும் பள்ளி மாணவ – மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளையும் கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி. மற்றும் அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஆகியோர் வழங்கினர். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.கீர்த்தி பிரியதர்ஷினி, அரசு அதிகாரிகள் மற்றும் மாவட்ட,நகர, ஒன்றிய மற்றும் கிளை கழக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

## பா.ஜ.க. வின் பாச வலையிலிருந்து

# அ.தி.மு.க. விரிக்கும் மோச வலையை சிறுபான்மை மக்கள் நம்ப மாட்டார்கள்!

### ‘நியூஸ் 18’ செய்திகள் தொலைக்காட்சி ‘சொல்லதிகாரம்’ நிகழ்ச்சியில் - ‘தீக்கதிர்’ சிறப்பாசிரியர் மதுக்கூர் இராமலிங்கம் வாதம் !

சென்னை,ஜன.13 -

தீக்கதிர் சிறப்பாசிரியர் மதுக்கூர் இராமலிங்கம் நியூஸ் 18 செய்திகள் தொலைக்காட்சியின் ‘சொல்லதிகாரம்’ நிகழ்ச்சியில் பங்கேற்று முன்வைத்த கருத்துகள் வருமாறு:

அண்மையில் முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமிக்கு சிறுபான்மை மக்களின் பாதுகாவலர் என்ற பட்டமும் கொடுத்து, ஒரு வீர வாளையும் கொடுத்தார்கள். அந்த வாள் மதச்சார்பின்மையை வெட்டி வீழ்த்திய வாள் ஆகும்.

ஜெயலலிதா முதல்வராக இருந்தபோது குஜராத் மோடி அரசைப் பின்பற்றி மதமாற்றத் தடைச் சட்டம் மற்றும் ஆடுகோழி பலியிடத் தடைச் சட்டம் கொண்டுவந்தார். தேர்தல் தோல்விக்குப் பிறகு அந்தச் சட்டங்களை திரும்பப் பெற்றுக் கொண்டார் என்பது நேற்றைய வரலாறு.

அயோத்தியில் பாபர் மசூதியை இடிக்க கரசேவகர்களை ஜெயலலிதா அனுப்பிவைத்தார் என்று பா.ஜ.க.வைச் சேர்ந்த சுப்பிரமணிய சுவாமி கூறியது மறந்துவிடக் கூடியதல்ல. இராமருக்கு அயோத்தியில் கோவில் கட்டாமல் வேறு எங்கே கட்டுவது என்று ஏகடியம் பேசியவர் தான் ஜெயலலிதா.

ஒரு நிலையில், பா.ஜ.க.வுடன் கூட்டணி வைத்தது நான் செய்த தவறு. இனி அந்தத் தவறைச் செய்யமாட்டேன் என்றார் ஜெயலலிதா. அவருடைய மறைவிற்குப் பிறகு ஆட்சிக்கு வந்த எடப்பாடி பழனிசாமியின் அமைச்சர்கள் மோடி எங்கள் டாடி என்று கொஞ்சிக் குலாவினார்கள்.

பழைய கதை இருக்கட்டும். பில்கிஸ் பானு கும்பல் பாலியல் வல்லுறவுக் குற்றவாளிகளை குஜராத் பா.ஜ.க. அரசு முன் விடுதலை செய்ததை உச்சநீதிமன்றம் ரத்து செய்துள்ளது. குஜராத் பா.ஜ.க. அரசு செய்தது அப்பட்டமான பிராடு என உச்சநீதிமன்றம் ஓங்கிக் குட்டியுள்ளது. பில்கிஸ் பானு நீதிக்காக நடத்திய நெடிய போராட்டம் வெற்றி பெற்றுள்ளது என்று தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் உச்சநீதிமன்றத் தீர்ப்பை வரவேற்று அறிக்கை விடுத்துள்ளார்.

ஆனால், பா.ஜ.க.வுடன் இனி எப்போதும் கூட்டு இல்லை என்று ஊர் ஊராகச் சென்று சத்தியம் செய்யும் எடப்பாடி பழனிசாமி இது பற்றி மூச்சுவிட மறுப்பதேன்? பழைய பாசமா அல்லது பயமா?

ஒருவேளை, வரும் நாடாளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.க.விற்கு தப்பித் தவறி ஒன்றோ, இரண்டோ இடம் கிடைத்தால் ஒன்றியத்தில் யார் ஆட்சியமைக்க அதிமுக ஆதரவளிக்கும் என எடப்பாடி பழனிசாமி சொல்லத் தயாரா? தமிழ்நாட்டிலும் புதுவையிலும் அந்தக் கட்சிக்கு ஒரு இடம் கூடக் கிடைக்கப்போவதில்லை. எனவே, அந்தக் கவலை எங்களுக்கு இல்லை என்று அ.தி.மு.க. நினைக்கிறதா?

‘குடியுரிமை திருத்தச் சட்டத்தை கூட்டணி தர்மத்திற்காக ஆதரித்து விட்டோம். அது தவறு தான. இனி அந்தத் தவறை செய்யமாட்டோம்’ என்று பாவமன்னிப்புக் கேட்கிறார் பழனிசாமி. நாடாளுமன்ற மாநிலங்களவையில் அ.தி.மு.க. அந்தச் சட்டத்தை ஆதரித்ததால் தான் அது நிறைவேறியது. அந்தப் பாவத்திற்கு அதிமுகவும் பொறுப்பேற்க வேண்டும். சிறுபான்மை இஸ்லாமிய மக்களுக்கு மட்டுமல்ல, ஈழத் தமிழர்களுக்கும் இந்தச் சட்டத்தை ஆதரிப்பதன் மூலம் இரட்டைத் துரோகம் செய்தது அதிமுக.

‘நாடாளுமன்றத்தில் ஆதரித்தது மட்டுமல்ல. இந்தச் சட்டத்தால் யாருக்குப் பாதிப்பு?’ என்று அப்போது முதல்வராக இருந்த எடப்பாடி பழனிசாமி நியாயப்படுத்தினார். குடியுரிமைச் சட்டத்தை எதிர்த்து தமிழ்நாடு முழுவதும் சிறுபான்மை இஸ்லாமிய மக்கள் ஷாகின் பாக் அமைத்துப் போராடினார்கள். சென்னை வண்ணாரப்பேட்டையில் அமைதியாகப் போராடியவர்கள் மீது கொடூரத் தடியடி நடத்தியது எடப்பாடி பழனிசாமி ஆட்சிதானே? அது ஒருபுறமிருக்க, இப்போது கூட ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா குடியுரிமை திருத்தச் சட்டத்தை நிறைவேற்றி விட்டோம். இப்போது நடைமுறைப்படுத்தப் போகிறோம் என மிரட்டுகிறாரே, இதை நடைமுறைப்படுத்தவிட மாட்டோம் என அறிக்கை விட எடப்பாடி பழனிசாமியைத் தடுப்பது எது?



மதுக்கூர் ராமலிங்கம்
சிறப்பாசிரியர்
‘தீக்கதிர்’ நாளிதழ்

கொரோனா கொடுங்காலத்தில் அந்தக் கொடிய நோயை இஸ்லாமிய மக்களோடு இணைத்து விஷமப் பிரச்சாரம் செய்தது யார்? தில்லியில் நடைபெற்ற தப்லீக் ஜமாஅத் மாநாட்டில் பங்கேற்ற முஸ்லிம்களால் தான் கொரோனா பரப்பப்பட்டது என ஒன்றிய மோடி அரசு பொய் பரப்பியது. தமிழ்நாட்டில் “சிங்கிள் சோர்ஸ்” என இதை அழைத்து அன்றாடம் பேட்டி கொடுத்தது அ.தி.மு.க. ஆட்சியில் தானே.

தமிழ்நாட்டைச் சேர்ந்த ஸ்டெ யின்ஸ் பாதிரியார் பொய் வழக்கில் கைது செய்யப்பட்டு சிறையிலேயே மரணமடைந்த போது மோடி ஆட்சியை அ.தி.மு.க. கண்டித்ததா? ஜம்மு காஷ்மீரில் ஆசிபா என்ற சிறுமி கொடூரமாக பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்கப்பட்டு மத வெறியர்களால் கொல்லப்பட்டதை அ.தி.மு.க. கண்டித்ததா? மாட்டிறைச்சியின் பெயரால் சிறுபான்மை மற்றும் தலித் மக்கள் கொல்லப்பட்டபோது அ.தி.மு.க. கண்டித்ததுண்டா? அதெல்லாம் போகட்டும், மணிப்பூரில் கிறிஸ்தவ குக்கி இன மக்கள் இரட்டை எஞ்சின் ஆட்சிகளின் ஆசியோடு படுகொலை செய்யப்பட்டார்கள். பெண்களை நிர்வாணப்படுத்தி, நடுரோட்டில் இழுத்து வந்து கும்பல் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கினார்கள். பிரதமர் மோடி இப்போது வரை மணிப்பூர் பக்கமே எட்டிப் பார்க்கவில்லை. நாடாளுமன்றத்தில் திமுக, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட கட்சிகள் இதற்காகப் போராடின. ஆனால், அ.தி.மு.க., பா.ஜ.க.வைக் கண்டு பதுங்கியது, பம்மியது.

பாஜக கூட்டணியில் நாங்கள் இல்லை. எங்களுக்குக் கொள்கை முக்கியம் என்கிறாரே எடப்பாடியார். நாடாளுமன்றத்திற்கே பாதுகாப்பில்லாமல் அத்துமீறி இருவர் நுழைந்து புகைக் குண்டுகளை வீசிய போது மோடி அரசை அ.தி.மு.க. கண்டித்ததா? இதை எதிர்த்துப் போராடிய தமிழ்நாட்டைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட 146 பேர் இடைநீக்கம் செய்யப்பட்டபோது அ.தி.மு.க. கண்டித்ததா?

மோடி ஆட்சியின் மோசமான கொள்கைகளை எதிர்த்து நாங்கள் கூட்டணியை விட்டு வெளியேறுகிறோம் என்று கூறும் திராணி அ.தி.மு.க.விற்கு இல்லை. மாறாக, மோடி ஆட்சியைப் பற்றி ஒரு வார்த்தை கூட கண்டிக்க இவர்கள் தயாராக இல்லை. இவர்களை நம்ப தமிழ்நாட்டு மக்களும் தயாராக இல்லை.

சிறையில் உள்ள இஸ்லாமியர்களை விடுவிக்கக் கோரும் தீர்மானத்தை நிறைவேற்றி ஆளுநரின் ஒப்புதலுக்கு திமுக அரசு அனுப்பியது. முக்கியமான மசோதாக்களை ஆளுநர் முடக்கி வைத்திருப்பதை உச்சநீதிமன்றம் கண்டித்தது. இதற்கான வழக்கை மாநில திமுக அரசு தொடுத்தது. தமிழ்நாட்டிற்கு அனைத்து வகையிலும் எதிராக உள்ள இப்போதைய ஆளுநரோடு அதிமுக இணக்கமாக உள்ளது. இஸ்லாமிய சிறைவாசி களை விடுவிக்கக் கோரும் தீர்மானத்திற்கு ஒப்புதல் அளிக்க வேண்டுமென ஆளுநரைச் சந்தித்து அழுத்தம் கொடுக்க அதிமுக தயாரா?

இஸ்லாமிய சமூகத்தினருக்கு இட ஒதுக்கீடு வழங்க மாநில அரசுகள் முன்வந்தபோது மத ரீதியாக இட ஒதுக்கீடு வழங்கக் கூடாது என நீதிமன்றம் தடுத்தது. கலைஞர் முதல்வராக இருந்தபோது பிற்படுத்தப்பட்டோர் இட ஒதுக்கீட்டின் ஒரு பகுதியாக இஸ்லாமியருக்கு 3.5 சதவீதம் இட ஒதுக்கீடு வழங்கினார். அதனால் தான் தமிழ்நாட்டில் இஸ்லாமியர்களுக்கான இட ஒதுக்கீடு நிலை நிறுத்தப்பட்டது. மதம் மாறிய தலித் கிறிஸ்தவர்களுக்கும் தலித் மக்களுக்கு வழங்கப்படும் இட ஒதுக்கீடு உள்ளிட்ட சலுகைகளை வழங்கவேண்டுமென திமுக அரசு சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றி ஒன்றிய அரசுக்கு அனுப்பியுள்ளது. இந்தப் பிரச்சனையில் அ.தி.மு.க. துரும்பை யாவது கிள்ளிப் போட்டது உண்டா?

பசிப் பிணி போக்கும் காலை உணவுத்திட்டத்தை சிறுபான்மை மதத்தினர் நடத்தினர் நடத்தும் கல்வி நிலையங்களுக்கும் விஸ்தரிக்கப் போவதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். அத்துடன் சிறுபான்மையினர் நலன் பேணும் 17 அறிவிப்புகளை வெளியிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. உண்மையில் பா.ஜ.க. பாசத்திலிருந்து அ.தி.மு.க. விலகவில்லை. அவர்களே இது “நேச்சுரல் அலையன்ஸ்” என்று முன்பு கூறியிருக்கி றார்கள். அ.தி.மு.க. தேர்தலுக்காக போடும் நாடகத்தை சிறுபான்மை மக்கள் மட்டுமல்ல, தமிழ்நாட்டைச் சேர்ந்த யாரும் நம்பமாட்டார்கள் என்பது உறுதி.

இவ்வாறு அவர் கூறினார்.

---

## புதுக்கோட்டை வடக்கு மாவட்ட

# தகவல் தொழில் நுட்ப அணி பயிற்சி வகுப்பு!

### மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் அறிவிப்பு!



புதுக்கோட்டை, ஜன. 13 -

புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் அறிவுறுத்தலின்படி, கழக இளைஞரணிச் செயலாளர், இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைபடி,

தலைமைக் கழகம் அறிவிப்பின்படி கழக தகவல் தொழில்நுட்ப அணியின் முன்னெடுப்பில் மாவட்ட கழகங்கள் நடத்தும் மாவட்ட அளவிலான “சமூக ஊடகங்களுக்கான பயிற்சி வகுப்பு” புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகம் “சமூக ஊடகங்களுக்கான பயிற்சி வகுப்பு” இன்று (13.01.2024) காலை 9.00 மணியளவில் புதுக்கோட்டை திருவப்பூர் கனகம்மன் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இப்பயிற்சி வகுப்பில் கழக இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, தொண்டர் அணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, பொறியாளர் அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, விவசாய தொழிலாளர் அணி, விவசாய அணி, வர்த்தகர் அணி, மீனவர் அணி,மருத்துவ அணி, நெசவாளர் அணி,சுற்றுச்சூழல் அணி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை, இலக்கிய அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, அயலக அணி, ஆகிய அனைத்து அணிகளின் தலைவர் துணை தலைவர் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் அனைவரும் கட்டாயம் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**குறிப்பு :**

1.அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் தங்களது அணியின் தலைவர் துணை தலைவர் மற்றும் துணை அமைப்பாளர்களிடம் இத்தகவலை தெரிவித்து இப்பயிற்சி வகுப்பில் கண்டிப்பாக அனைவரும் கலந்து கொள்ள செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

2.அனைத்து அணிகளின் தலைவர் துணை தலைவர் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் அனைவரும் அரங்கத்திற்கு சரியாக 9.00 மணிக்கு முன்னரே வருகை தந்து தலைமைக் கழகத்தின் ஆன்லைன் வருகை பதிவேட்டில் தங்களது பெயர்களை கட்டாயம் பதிவு செய்து கொள்ளவேண்டும்.

3.புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணியின் அனைத்து மாவட்ட, மாவட்ட துணை, தொகுதி, ஒன்றிய,நகர, பேரூர் (களப்பணி சமூகவலைதளம் மகளிர்) ஒருங்கிணைப்பாளர்கள் இன்று (13.01.2024) காலை 8.00 மணிக்குள் புதுக்கோட்டை திருவப்பூர் கனகம்மன் திருமண மண்டப அரங்கத்திற்கு வருகை தர வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



சேலம் மத்திய மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டத்தில் மாவட்டக் கழக செயலாளர். இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார். உடன் மாவட்ட அவைத்தலைவர் ஜி.கே.சுபாசு, பொருளாளர் மு.கார்த்திகேயன், துணைச் செயலாளர்கள். ஜி. குமரவேல். மஞ்சுளா, திருநாவுக்கரசு, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள். சி.ராஜேந்திரன், தாமரைக்கண்ணன். கே.டி.மணி மாநகர நிர்வாகிகள். பா.ரகுபதி, கே.ஆர்.முருகன், மேயர் ஆ.ராமச்சந்திரன் உட்பட மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

---

## கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில்,

# “சமூக ஊடகங்களுக்கான பயிற்சி வகுப்பு!”

### கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா.கார்த்திக் அறிவிப்பு!



கோவை, ஜன. 13 -

கோவை மாநகர் மாவட்டச் செயலாளர் நா. கார்த்திக் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தி.மு.க. தலைமைக் கழகம் அறிவிப்பின்படி, தி.மு.க. தகவல் தொழில் நுட்ப அணியின் முன்னெடுப்பில், கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில், இன்று (13.1.2024 - சனிக்கிழமை) காலை 9 மணிமுதல் 12 மணி வரை, கோவை வடகோவை பவர் ஹவுஸ் அருகில் உள்ள, கிஸ்கால் கிராண்ட் ஹோட்டல் அரங்கில், “சமூக ஊடகங்களுக்கான பயிற்சி வகுப்பு” நடைபெற உள்ளது.

இப்பயிற்சி வகுப்பில், கோவை மாநகர் மாவட்டத்திற்கு உட்பட்ட, கழக இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, தொண்டர் அணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, பொறியாளர் அணி, மருத்துவ அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, விவசாய அணி,விவசாயத்தொழிலாளர் அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி உள்ளிட்ட கழக அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---

## திருவாரூர் மாவட்ட

# தகவல் தொழில் நுட்ப அணி பயிற்சி வகுப்பு!

### மாவட்டச் செயலாளர் பூண்டிகே.கலைவாணன்எம்.எல்.ஏ. அறிவிப்பு !



திருவாரூர், ஜன. 13 -

திருவாரூர் மாவட்டச் செயலாளர் பூண்டி கே. கலைவாணன் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

திருவாரூர் மாவட்டத்தில் தலைமைக் கழகம் அறிவித்துள்ள தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணியின் முன்னெடுப்பில் இன்று (13.01.2024 - சனிக்கிழமை) காலை 10.00 மணிக்கு திருவாரூர் கீழவீதி ஆர்விகா திருமண மண்டபத்தில் மாவட்ட அளவிலான சமூக ஊடகங்களுக்கான பயிற்சி வகுப்பு நடைபெறுகிறது.

கீழே குறிப்பிட்டுள்ள அணிகளான இளைஞரணி, மாணவரணி, மகளிர் அணி, தொண்டர் அணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி விளையாட்டு மேம்பாட்டு அணி, சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி உள்ளிட்ட கழக சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



விழுப்புரம் தொகுதிக்குட்பட்ட மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் 2470 மாணவ – மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை டாக்டர் இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ. வழங்கினார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### செங்குன்றம் மிசா இரா. ஏழுமலை
### சனவரி 13 (2005)



கழக துவக்கக் காலத்திலிருந்தே உறுப்பினராகி, கழகப் பணியாற்றி வந்த இவர், கழகப் பொதுக்குழு உறுப்பினராகப் பொறுப்பு வகித்தார்.

நாரவாரிக்குப்பம் பேரூராட்சி மன்ற உறுப்பினராகவும் – பேரூராட்சித் தலைவராகவும் பொறுப்பேற்று அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்ற இவர், நெருக்கடிக் காலத்தில் மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

“சட்டமன்றத்தில் இடம் கிடைக்காவிட்டாலும், கலைஞர் இதயத்தில் எப்பொழுதும் ஏழுமலை அவர்களுக்கு இடமுண்டு.” என்று பொதுச்செயலாளர் பேராசிரியரால் பாராட்டப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



திருச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் சுற்றுலாத்துறை சார்பில் நடைபெற்ற பொங்கல் விழாவில் அமைச்சர் கே.என்.நேரு உறியடித்து பொங்கல் விழாவினை கொண்டாடினார். நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் பிரதீப் குமார், மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, சேர்மன் துரைராஜ் உட்பட அரசு அதிகாரிகள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.




சென்னை, நந்தம்பாக்கம், வர்த்தக மையத்தில், நேற்று முன்தினம் (11.01.2024) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை சார்பில் நடைபெற்ற அயலகத் தமிழர் தினம் – 2024 விழாவை தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார். இவ்விழாவில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மருத்துவர் கலாநிதி வீராசாமி, எம்.எம்.அப்துல்லா, சட்டமன்ற உறுப்பினர் எ.எம்.வி.பிரபாகரராஜா, அயலகத் தமிழர் நல வாரியத்தின் தலைவர் கார்த்திகேய சிவசேனாபதி, தமிழ்நாடு பாடநூல் கழகத்தின் தலைவர் ஐ.லியோனி, பொதுத் துறை செயலாளர் க.நந்தகுமார், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் பா.கிருஷ்ணமூர்த்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை தமிழ்நாடு அரசின் ‘அயலகத் தமிழர் தினம் 2024’ல் பங்கேற்பதற்காக சென்னைக்கு வருகை தந்திருக்கும் சிங்கப்பூர் நாட்டின் உள்துறை மற்றும் சட்டத்துறை அமைச்சர் கா.சண்முகம் அவர்கள் தலைமைச் செயலகத்தில் சந்தித்து பேசினார். அதுபோது இருவரும் தமிழ்நாட்டிற்கும் சிங்கப்பூருக்கும் இடையே உள்ள நீண்ட நெடிய பண்பாடு மற்றும் கலாச்சார உறவுகளையும் அவற்றை இன்னும் வலுப்படுத்துவதற்கான முயற்சிகளையும் பற்றி பல்வேறு கருத்துகளை பரிமாறிக்கொண்டனர்.





சென்னை, நந்தம்பாக்கம், வர்த்தக மையத்தில், நேற்று முன்தினம் (11.01.2024) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை சார்பில் நடைபெற்ற அயலகத் தமிழர் தினம் – 2024 விழாவில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சியினைத் திறந்து வைத்தார். இவ்விழாவில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மருத்துவர் கலாநிதி வீராசாமி, எம்.எம்.அப்துல்லா, அயலகத் தமிழர் நல வாரியத்தின் தலைவர் கார்த்திகேய சிவசேனாபதி, பொதுத் துறை செயலாளர் க.நந்தகுமார், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் பா.கிருஷ்ணமூர்த்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ‘கேலோ இந்தியா’ இளைஞர் விளையாட்டுப் போட்டிகள்!

## முன்னேற்பாட்டுப் பணிகள் குறித்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் ஆய்வுக் கூட்டம்!



தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (11.01.2024), இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில், கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுகள் – 2023 போட்டியை தமிழ்நாட்டில் சென்னை, மதுரை, திருச்சி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய 4 மாவட்டங்களில் வரும் ஜனவரி 19 முதல் 31–ந் தேதி வரை நடத்துவது தொடர்பான நிர்வாக குழு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, இந்திய விளையாட்டு ஆணையத்தின் துணை இயக்குநர் ஏக்தா விஷ்னோய் மற்றும் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்கள், அரசு செயலாளர்கள், காவல் துறை உயர் அலுவலர்கள் மற்றும் நிர்வாக குழு உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சென்னை, ஜன. 13 -

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 6வது கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் 2023 நடத்துவதற்காக முன்னேற்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளும் நிர்வாகக் குழுவினரிடம் ஆலோசனை மேற்கொண்டார். இந்த ஆலோசனைக் கூட்டத்திற்கு, தமிழ்நாடு அரசு முதன்மைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, முன்னிலை வகித்தார். தமிழ்நாட்டில் சென்னை, திருச்சி, மதுரை, கோவை ஆகிய இடங்களில் 2024 ஜனவரி 19 முதல் 31 வரை விளையாட்டுப் போட்டிகள் நடைபெற உள்ளன. கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகளில் மொத்தம் 36 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களிலிருந்து, 18 வயதுக்கு உட்பட்ட பிரிவில் சுமார் 6000க்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர் வீராங்கனைகளும் 1600க்கும் மேற்பட்ட பயிற்சியாளர்களும் பங்கேற்க உள்ளனர். மேலும், 1000க்கும் மேற்பட்ட நடுவர்கள் மற்றும் 1200க்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள் ஈடுபடுத்தப்பட உள்ளனர். இந்த ஆண்டு 27 பிரிவுகளில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ளன. தமிழ்நாட்டின் பாரம்பரிய விளையாட்டான சிலம்பம் டெமோ விளையாட்டுகளில் (Demo Sports) இடம்பெறுகிறது.

போட்டி நடைபெறும் இடங்கள் & அட்டவணை, உள்கட்டமைப்பு நிலை, வரவேற்பு/நெறிமுறை, போக்குவரத்து, துவக்க & நிறைவு விழாக்கள், விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் நகரங்கள், குடிநீர் வழங்கல் & சுகாதார வசதி, போட்டி நடைபெறும் நாளுக்கான நிகழ்வு மேலாண்மை, ஊடகம் & பத்திரிகை, விளம்பரப்படுத்துதல், போட்டி நடத்தும் மாநிலம்/மாவட்டத்தை முடுக்கிவிடுதல், பாதுகாப்பு ஏற்பாடுகள், பரிசு விநியோகம், மருத்துவச் சேவைகள், தங்குமிடம், சுகாதாரம் & உணவு வழங்குதல், விளையாட்டு மைதானங்களுக்கான நிர்வாகக் கட்டமைப்பு, மேடை ஏற்பாடுகள், மின்சார விநியோக வசதி, முக்கியச் சாலைகள் & சாலைத் தளவாடங்கள், இந்திய அரசு/மாநில அரசு ஒருங்கிணைப்பு, மாநில ஒருங்கிணைப்பு & கட்டுப்பாட்டு அறை, அங்கீகார அட்டைகள், தொழில்நுட்பம் & தகவல் தொழில்நுட்பச் சேவைகள், பார்வையாளர்களுக்கான அடிப்படை வசதிகள், பண்பாட்டுப் பொழுதுப் போக்கு நிகழ்ச்சிகள், தன்னார்வலர்கள் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் இந்தக் கூட்டத்தில் விரிவாக ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்யா மிஸ்ரா, இந்திய விளையாட்டு ஆணையத்தின் துணை இயக்குநர் ஏக்தா விஷ்னோய், அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்கள், அரசுச் செயலாளர்கள், காவல் துறை உயர் அலுவலர்கள், நிர்வாகக் குழு உறுப்பினர்கள் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.



தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (11.01.2024) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை, விளையாட்டுத் துறையில் தலைசிறந்து விளங்கும் வீரர், வீராங்கனைகளுக்கு ஒன்றிய அரசால் வழங்கப்படும் உயரிய விருதான “வாழ்நாள் சாதனையாளர் தயான் சந்த் விருது” பெற்ற கபடி வீராங்கனை திருமதி. கவிதா செல்வராஜு நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, உடனிருந்தனர்.

### ரூ.98.70 லட்சம் மதிப்பில்

# நீலகிரி அதிகரட்டி பேரூராட்சியில் கான்கிரீட் சாலை!

## அமைச்சர் கா.ராமச்சந்திரன் திறந்து வைத்தார்!

ஊட்டி, ஜன.13 -

நீலகிரி மாவட்டம், அதிகரட்டி பேரூராட்சிக்குட்பட்ட முட்டிநாடு கிராமத்தில் மூலதன மானிய நிதியின் கீழ் ரூ.98.70 இலட்சம் மதிப்பில் அமைக்கப்பட்ட தடுப்புச் சுவருடன் கூடிய 1.110 கி.மீ நீளமுள்ள சிமெண்ட் கான்கிரீட் சாலையினை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேற்று திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது :

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் தமிழ்நாடு அரசு பொறுப் । பேற்ற கடந்த 2 ஆண்டுகளில் பல சிறப்புத்திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். அதிலும் குறிப்பாக பெண்கள் எந்த அளவிற்கு முன்னேறுகின்றனரோ அந்த அளவிற்கு சமுதாயம் நல்ல நிலையில் இருக்க வேண்டும் என்பதற்காக கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் கீழ் மகளிர்க்கு மாதம் ரூ.1,000 வழங்கும் திட்டம். ஆண்களுக்கு நிகராக பெண்கள் வருமானத்தைப் பெருக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இத்திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. நீலகிரி மாவட்டத்தில் இத்திட்டத்தின்கீழ் சுமார் 1.16 இலட்சம் மகளிர் பயன் பெற்று வருகிறார்கள், தற்போது கூட, தமிழ் நாடு முதலமைச்சர் அனைத்து அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கு 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை,1 முழு நீளக் கரும்பு மற்றும் ரூ.1000 ரொக் கம் பொங்கல் பரிசுத்தொ குப்பு வழங்கும் திட்டத்தினை தொடங்கி வைத்தார். நமது மாவட்டத்திலும் அனைத்து அரிசி பெறும் குடும்ப அட்டைதார்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு மற்றும் ரூ.1,000 நேற்றைய தினத்திலிருந்து வழங்கப் பட்டு வருகிறது. மேலும், அதிகரட்டி பேரூராட்சியைப் பொறுத்த வரை கடந்த 2% ஆண்டுகளில் மட்டும் 10.66 கோடி மதிப்பீட்டில் பல்வேறு வளர்ச்சித்திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தற்போது நடைபெற்று முடிந்த உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில், 6.64 இலட்சம் கோடி முத லீடுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன. இதன் மூலம் சுமார் 26.91 இலட்சம் வேலைநாடுநர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாகவுள்ளது. அரசுப் பள்ளிகளில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுப்பட்டுள்ளது.

காலை உணவுத்திட்டம் சிறப்பாக செயல்பட்டு வருவதால், அரசுப் பள்ளிகளில் மாணாக்கர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது என்றார்.

இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் இரா. கீர்த்தி பிரியதர்சினி, பேரூராட்சிகளின் உதவிப் பொறியாளர் மோகன் ராஜ், அதிக ரட்டி பேரூராட்சி செயல் அலுவலர் நடராஜ். அதிக ரட்டி பேரூராட்சி தலைவர் பேபி முத்து, துணைத் தலைவர் செல்வன் உட்பட பலர் சுலந்து கொண்டனர்.

### 1000 பேரை இலவசமாக

# அறுபடை வீடுகளைத் தரிசிக்கும் திட்டத்திற்குப் பாராட்டு!

## கோவில் பூசாரிகள் நலச் சங்கத் தலைவர் பி.வாசு அறிக்கை!

சேலம், ஜன. 13 -

ஆண்டு தோறும் 1000 பேரை இலவசமாக அறுபடை வீட்டிற்கு அழைத்துச் செல்லும் திராவிட மாடல் அரசுக்கு கோவில் பூசாரிகள் நலச் சங்கத் தலைவர் பி.வாசு பாராட்டு தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

தமிழ்க் கடவுளான எல்லாம் வல்ல முருகப்பெருமானின் அறுபடை வீடுகளைத் தரிசிக்க ஆண்டுக்கு 1000 பேரை கட்டணம் இன்றி அழைத்துச் செல்ல மேற்கொண்டுள்ள செயல் திட்டத்தைப் பாராட்ட வார்த்தைகளே இல்லை. இத்திட்டம் சிறப்பாகச் செயல்பட ஆக்கபூர்வமான செயல் திட்டங்களை மேற்கொண்டு வரும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர் பாபு அவருக்கு மனப்பூர்வமாக நன்றி.

தமிழ்நாட்டில் அறுபடை வீடுகளான திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழனி, திருத்தணி, சுவாமிமலை, பழமுதிர்ச்சோலை ஆகிய இடங்களில் எழுந்தருளி அருள் பாலிக்கும் முருகப்பெருமான் தமிழ்நாட்டில் உள்ள தமிழர்கள் மட்டுமின்றி உலகத் தமிழர்கள் அனைவரது நெஞ்சில் நீங்கா இடம் பெற்றவர். இந்த அறுபடை வீடுகளையும் ஒரு சேர தரிசிக்க 200 பக்தர்கள் வீதம் ஆண்டுக்கு 1000 பேரை கட்டணம் இன்றி இந்து சமய அறநிலைத்துறை மூலம் அழைத்துச் சென்று வர செய்துள்ள ஏற்பாடு வரவேற்கத்தக்கது.

தமிழ்நாட்டில் ஆன்மீகம் செழிக்க திராவிட முன்னேற்றக் கழக தலைமையிலான அரசு எண்ணற்ற செயல் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. 60 வயதிற்கு மேற்பட்ட முதிய பூசாரிகள் ஓய்வூதியத்தை நான்காயிரமாக உயர்த்தி அவர்கள் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

இந்து சமய அறநிலைத் துறை கட்டுப்பாட்டில் உள்ள ஒரு கால பூஜை நடைபெறும்திருக்கோவில்களில் பணியாற்றும் பூசாரிகளுக்கு மாத ஊக்கத் தொகை ஆயிரம் ரூபாய் வழங்க முதல் முறையாக வழி செய்தது. அத்துடன் அனைத்துத்திருக்கோயில்களிலும் தமிழில் அர்ச்சனை சமூக நீதியை நிலை நாட்டு வகையில் அனைத்துச் சாதியினரும் அர்ச்சராக வகை வழிவகை செய்தது. அர்ச்சகர் பயிற்சி முகாம் மற்றும் பெரிய திருக்கோவில்களில் முழு நேர அன்னதானம் போன்ற பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி இந்திய நாட்டிற்கு எடுத்துக் காட்டாக திராவிட மாடல் ஆன்மீக அரசு செயல்பட்டு வருகிறது.

எனவே இந்த ஆன்மீக மாடல் அரசுக்கு கோவில் பூசாரிகள் நலச் சங்கம் என்றென்றும் உறுதுணையாக இருக்கும்.

இவ்வாறு தனது அறிக்கையில் அவர் குறிப்பிட்டுள்ளார்.




தூத்துக்குடி மாவட்ட தொழில் வளர்ச்சிக்கும்
பல்லாயிரம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பிற்கும்
பெரும் பாய்ச்சல் முன்னேற்றம் ஏற்பட உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில்

**ரூ.84,522 கோடி பெற்றுத் தந்த**

**மாண்புமிகு**

# தமிழ்நாடு முதலமைச்சர்

தி.மு.க தலைவர் அவர்களுக்கு தூத்துக்குடி மாவட்ட மக்களின் சார்பாக

**நெஞ்சார்ந்த நன்றி. நன்றி.. நன்றி...**

ARASU ARTS

## அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன்

மீன்வளம், மீனவர் நலன் (ம) கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்
தூத்துக்குடி தெற்கு மாவட்டச் செயலாளர்


கொரோனா
உடல் காத்தோம்... உயிர் காத்தோம்...
புத்தக (தமிழ்-ஆங்கிலம்)
வெளியீட்டு விழா
வரவேற்புரை
டாக்டர்.பழனியப்பன்
(திருமகள் நிலையம்)
நூல்கள் அறிமுக உரை
திரு.கோ.ஒளிவண்ணன்
(எமரால்டு பதிப்பகம்)
CORONA CHRONICLES
நூல்களை வெளியிடுபவர்
மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின்
இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
பெற்றுக் கொள்பவர்கள்
திரு.இந்து என்.ராம்
மூத்த பத்திரிகையாளர்
டாக்டர்.மோகன் காமேஸ்வரன்
(MERF நிறுவனர் )
தொகுத்து வழங்குபவர்
கவிஞர் இளைய கம்பன்
அனைவரும் வருக! வருக!! வருக!!!
நாள்: 13.01.2024
சனிக்கிழமை
பிற்பகல் 3.00 மணி
இடம்: 47வது சென்னைப் புத்தகக் காட்சி,
YMCA நந்தனம்.
அனைவரையும் அழைத்து மகிழும்...
மா.சுப்பிரமணியன்
மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்
நூல் ஆசிரியர்
Santhosh Design 99401 80492



சேலம் மாவட்டம் பெத்தநாயக்கன்பாளையத்தில் கழக இளைஞரணி இரண்டாவது மாநில மாநாடு வருகின்ற 21 ஆம் தேதி நடைபெறுகின்றது. இதனையடுத்து மாநாடு திடலில் உள்ள அலுவலகத்தில் மாநாடு குறித்து கலந்தாய்வு ஆலோசனை கூட்டம் கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாக துறை அமைச்சருமான கே.என்.நேரு தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கம், மத்திய மாவட்ட செயலாளர் இரா. ராஜேந்திரன் எம்.எல்.ஏ.,மேற்கு மாவட்ட செயலாளர் டி.எம்.செல்வகணபதி ,மாவட்ட துணை செயலாளர்கள் சுரேஷ்குமார் ,சின்னதுரை , எம்.பி.பார்த்திபன் ,மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ. ஏ. ஆறுமுகம் ,ஒன்றிய கழக செயலாளர்கள் மூர்த்தி சிவராமன் தங்க மருதமுத்து, பேரூர் செயலாளர்கள் வெங்கடேசன், வெங்கடேஸ்வரன், பொதுக் குழு உறுப்பினர்கள் முத்துலிங்கம், சோமசுந்தரம் , சந்திரமோகன், பேரூராட்சி தலைவர் அன்பழகன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர,பேரூர் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை சிவபுரம் ஜெ.ஜெ. கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு நடைபெற்ற "சட்டமன்ற நாயகர் – கலைஞர்" மாணவர்கள் கருத்தரங்க விழாவில், சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி மற்றும் அரசு தலைமைக் கொறடா முனைவர் கோவி.செழியன் ஆகியோர் நேற்று முன் தினம்(11.01.2024) பங்கேற்று, பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்கள். உடன் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா, மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மா.செல்வி, சட்டமன்றப் பேரவை கூடுதல் செயலாளர் ந.இரவிச்சந்திரன், மண்டலக் கல்லூரி கல்வி இணை இயக்குநர் முனைவர் அ.குணசேகரன், கற்பக விநாயகா கல்வி அறக்கட்டளை செயலாளர் சுப்பிரமணியன், அரிமளம் ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.மேகலாமுத்து, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதி நிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

# கடலோர வளங்களை மீட்டெடுக்க "நெய்தல் மீட்சி இயக்கம்"!

## தமிழ்நாடு அரசு துவக்கியுள்ளது!

சென்னை, ஜன. 13 -

தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம், பசுமைத் தமிழ்நாடு இயக்கம், தமிழ்நாடு ஈரநில இயக்கம், ஆகியவற்றைத் தொடர்ந்து, அரசின் நான்காவது திட்டமான தமிழ்நாடு கடலோர வளங்களை மீட்பதற்காக "நெய்தல் மீட்சி இயக்கத்தினை" தொடங்குவதற்கான ஆணைகளை தமிழ்நாடு அரசு புதன்கிழமை வெளியிட்டது. இதற்கான அறிவிப்பை 2023-2024 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை உரையில் நிதி மற்றும் மனிதவள மேலாண்மை அமைச்சர் வெளியிட்டுள்ளார்.

தமிழ்நாட்டின் 14 கடலோர மாவட்டங்களில், 1076 கிலோமீட்டர் தூரத்தை மையமாகக் கொண்டு, வரும் ஐந்து ஆண்டுகளில் உலக வங்கியின் நிதி உதவியுடன் நெய்தல் மீட்சி இயக்கம் செயல்படுத்தப்படும். கடற்கரையோர பல்லுயிர் பெருக்கம், கடற்கரையோரப் பாதுகாப்பு, கடற்கரையோர சமூகங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் மற்றும் கடலோரப் பகுதிகளில் மாசுக் கட்டுப்பாடு உள்ளிட்ட நான்கு முக்கிய கருப்பொருட்களை இத்திட்டம் கொண்டுள்ளது நீலப் பொருளாதாரத்தின் திறனைப் பயன்படுத்திக் கொள்ள முதன்முதலில் தமிழ்நாடு புளூ கார்பன் நிறுவனத்தை அமைப்பதை இந்தத் திட்டம் கருதுகிறது. தமிழ்நாடு "புளூ கார்பன் ஏஜென்சி" சதுப்புநிலங்கள், பவளப்பாறைகள் மற்றும் உவர் சதுப்பு நிலங்களை மீட்டெடுக்கும். மன்னார் வளைகுடாவில் உள்ள கரியாச் சல்லி தீவு, பவளப்பாறைகளை புனரமைக்கும் திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் பின்வரும் முயற்சிகளையும் மேற்கொள்ளும்.

1. பல்லுயிர் பாதுகாப்பு பூங்கா, கடம்பூர், செங்கல்பட்டு மாவட்டம்.

2. கடல் ஆமை பாதுகாப்பு மையம், நாகப்பட்டினம் மற்றும் சென்னை.

3. சர்வதேச கடற்பசு பாதுகாப்பு மையம், மனோரா, தஞ்சாவூர் மாவட்டம்.

4. கடற்கரையோர ஈரநிலங்களின் பாதுகாப்பு மற்றும் மறுசீரமைப்பு (பள்ளிக்கரணை உட்பட).

இம்முயற்சியின் கீழ் கடற்கரையோர பல்லுயிர் பாதுகாப்பிற்கு குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. 11 கடற்கரைகளை நீலக் கொடி கடற்கரைகள் என சான்றளிக்க அரசு திட்டமிட்டுள்ளது. பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை வசதிகளை அமைப்பதில் கடற்கரையோர சமூகங்களைச் சேர்ந்த இளைஞர்களை ஈடுபடுத்தவும், கைவிடப்பட்ட மற்றும் பயனற்ற மீன்பிடி உபகரணங்களை அகற்றவும், பிளாஸ்டிக் கழிவுகள் அதிகம் உள்ள இடங்களைக் கண்டறிதல் உள்ளிட்ட மாசுக் குறைப்புக்கான சுழற்சிப் பொருளாதாரத் தீர்வுகளுக்கான முன்முயற்சிகளில் ஈடுபடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

ஆறுகளின் வழித்தடங்களில் அதிக மாசு உள்ள பகுதிகளில் பிளாஸ்டிக் கழிவுகளை முறையாகப் பிரித்து சேமித்து வைப்பதற்கான பொருள் சேகரிப்பு வசதிகள் மற்றும் அப்பொருட்களை மறுசுழற்சி செய்யும் வசதிகள் ஆகியவற்றை நிறுவுவதன் மூலம் கடல் மாசுபாடு தடுக்கப்படும். மேலும் சேகரிப்பு வசதிகளை இணைக்க மின்னணு கழிவுப் பரிமாற்ற தளத்தை உருவாக்குதல், மறுசுழற்சி மற்றும் பொருட்களை மீண்டும் பயன்படுத்துதல், பயனுள்ள பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை. மீள்குடியேற்றமான வீடுகள், சுற்றுச்சூழலுக்கு உகந்த உள்கட்டமைப்பு, காலநிலைக்கேற்ற கடலோர விவசாயம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்கள், விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் திறன் மேம்பாட்டு முயற்சிகள் மூலம் காலநிலை மாதிரி கடலோர கிராமங்களை உருவாக்குதல் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் திறன் மேம்பாட்டு முயற்சிகள் மூலம் சமூகத்தினை ஈடுபடுத்துதல் ஆகியவை இத்திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் என்று தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## ரூ.7 இலட்சம் கோடி முதலீடு - 27 இலட்சம் வேலைவாய்ப்புகள்

# முதலீட்டாளர்கள் மாநாடு மூலம் சாதனை படைத்து விட்டார் முதல்வர்!

## விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் பாராட்டு!



சென்னை, ஜன. 13-

தமிழ்நாடு விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் அறிக்கை வருமாறு:-

பல்வேறு நாடுகள் பங்கு பெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை மிக வெற்றிகரமாக நடத்தி, சுமார் 27 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கக் கூடிய வகையில் 7 லட்சம் கோடி அளவிலான முதலீட்டை ஈர்த்து இந்தியாவையே திரும்பி பார்க்க வைத்திருக்கிறது தமிழ்நாடு அரசு. இந்த மகத்தான சாதனையை புரிந்த தமிழ்நாடு அரசின் முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களை நடுநிலையாளர்களும் நாளேடுகளும் பாராட்டி வருகின்றன. அந்த வகையில் விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சியும் முதலமைச்சரை பாராட்டி வாழ்த்துகிறது.

தொழில் வளர்ச்சி என்பது ஒரு நாட்டின் முன்னேற்றத்தில் மிகப்பெரிய பங்காற்றக்கூடிய ஒன்றாகும். இந்தியா போன்ற விவசாய நாடுகளில் விவசாயம் பொய்த்து வரக்கூடிய நிலையில் இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பை உருவாக்க வேண்டியது ஒரு அரசின் கடமையாகும். அது தொழில் துறையின் மூலமே சாத்தியமாக்கப்பட்டு வருகிறது. நாட்டின் வளர்ச்சிக்கும் இளைஞர்களின் வேலை வாய்ப்பிற்கும் பெரும்பங்காற்றக்கூடிய தொழில்துறையை பேணி காத்து வளர்த்தெடுக்க வேண்டியது ஒரு நல்ல அரசின் கடமையாகும். அந்தப் பணியை தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதிலிருந்து திட்டமிட்டு செய்து வருகிறார்.

2006-2011 காலகட்டத்தில் அன்றைய தி.மு.க. ஆட்சியில் தலைவர் கலைஞர் அவர்களுடைய கடும் முயற்சியால் 56 ஆயிரம் கோடிக்கும் அதிகமான அந்நிய முதலீடுகள் ஈர்க்கப்பட்டு பல்வேறு புதிய தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்பட்டு மக்களுக்கான வேலை வாய்ப்பு உருவாக்கப்பட்டது. அதன் பின் தமிழ்நாட்டில் ஆட்சியில் இருந்த பத்தாண்டு கால அ.தி.மு.க. அரசு தன்னுடைய நிர்வாக திறமையின்மையால் புதிய தொழிற்சாலைகளைத் தொடங்காதது மட்டுமல்ல ஏற்கனவே செயல்பட்டு வந்த பல தொழிற்சாலைகள் அண்டை மாநிலங்களுக்கு இடம்பெயர்ந்தன. இதனால் தொழில் துறையில், பொருளாதார வளர்ச்சியில் தமிழ்நாடு பின்னுக்கு தள்ளப்பட்டது.

இந்த நிலையில் தமிழ்நாட்டின் முதலமைச்சராக தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற பின் தொழில்துறையில் தனி கவனம் எடுத்து செயல்பட்டு வந்தார். 'முதலீட்டாளர்களின் முகவரி தமிழ்நாடு' என்ற பெயரில் முதலீட்டாளர்கள் மாநாடு நடத்தப்பட்டது. அதன் மூலம் சுமார் 2 இலட்சம் கோடி முதலீடு ஈர்க்கப்பட்டது. பல நாடுகளுக்கு தானே நேரில் சென்று அந்நிய முதலீடுகளை ஈர்க்க வழிவகை செய்தார். அதனுடைய உச்சமாக தற்போது சென்னையில் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை மிகப் பிரம்மாண்டமாக வெற்றிகரமாக நடத்தி, உலகம் திரும்பிப் பார்க்கும் வண்ணம், இந்தியா வியக்கும் வகையில் சுமார் 7 லட்சம் கோடி முதலீட்டை ஈர்த்து சாதனைப் படைத்துள்ளார். இதன் மூலம் வேலை வாய்ப்புகள் பெருகும், பொருளாதார வளர்ச்சியில் முன்னேற்றம் அடையும். 2030இல் ஒரு ட்ரில்லியன் அமெரிக்கன் டாலர் அளவிற்கான பொருளாதார வளர்ச்சி என்ற முதலமைச்சர் இலக்கு இலகுவாக அடைய சாத்தியக் கூறுகளை இப்போது வசமாக்கியுள்ளார்.

இப்படி தி.மு.க. ஆட்சி காலத்தில் மட்டும் தொழில் துறையில் ஏற்றம் ஏற்படுவதற்கு காரணம் ஒரு நம்பிக்கையான அரசு என்கிற அடையாளத்தை உறுதிப்படுத்துவதோடு, கட்டமைப்புப் பணிகளில் தனி கவனம் எடுத்து அரசு செயல்பட்டு வருகிறது. சட்டம் ஒழுங்கை நிலை நாட்டுவதில் தனிக்கவனம் போன்ற அடிப்படை வசதிகளில் ஆக்கப்பூர்வமாக செயல்படக்கூடிய அரசாக தி.மு.க. அரசு விளங்குகிறது. எனவே தான் தி.மு.க. ஆட்சி காலத்தில் இப்படிப்பட்ட தொழில்துறையில் முதலீடுகள் ஈர்க்கப்பட்டு புதிய தொழிற்சாலைகள் பெருகி இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு உறுதிப்படுத்தப்படுகிறது. எனவே இப்படி தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை அடுத்த நிலைக்கு வளர்த்தெடுக்க ஆக்கப்பூர்வமாக செயல்படும் தமிழ்நாடு முதலமைச்சரை விவசாயிகள்தொழிலாளர்கள் கட்சி பாராட்டுகிறது, வாழ்த்துகிறது.

இவ்வாறு பொன்குமார் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## தஞ்சை வடக்கு மாவட்ட

# கழக அணிகளின் நிர்வாகிகளுக்கு சமூக ஊடகங்களுக்கான பயிற்சி வகுப்பு!

## மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. அறிவிப்பு!



தஞ்சை,ஜன.13-

தஞ்சை வடக்கு மாவட்ட செயலாளர் சு. கல்யாணசுந்தரம் எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தலைமைக் கழக அறிவிப்பின்படி தி.மு.க தகவல் தொழில்நுட்ப அணியின் முன்னெடுப்பில் தஞ்சை வடக்கு மாவட்ட கழகம் நடத்தும், மாவட்ட அளவிலான சமூக ஊடகங்களுக்கான பயிற்சி வகுப்பு இன்று (13.01.2024) காலை 9.00 மணிக்கு, கும்பகோணம், சாரங்கபாணி தெற்கு தெரு, மூர்த்தி கலையரங்கத்தில் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் தஞ்சை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து சார்பு அணி அமைப்பாளர்கள், தலைவர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள் அனைவரும் குறித்த நேரத்தில் தவறாது கலந்து கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

குறிப்பு : மாவட்ட அமைப்பாளர்கள் தங்கள் அணி நிர்வாகிகளிடம் வருகைப் பதிவேட்டில் கையொப்பம் பெற்று வழங்குவதுடன் மேற்கண்ட பயிற்சி முடிந்தவுடன் மாவட்ட அமைப்பாளர்களுக்கு மட்டும் நடைபெறும் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## தஞ்சை மத்திய மாவட்டத்தில்

# சமூக ஊடகங்களுக்கான பயிற்சி வகுப்பு!

## மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



தஞ்சாவூர் மாவட்டக் கழக அலுவலகம், கலைஞர் அறிவாலயத்தில், இன்று (13.01.2024 - சனிக்கிழமை) காலை 09.30 மணியளவில் தி.மு,க தகவல் தொழில்நுட்ப அணி முன்னெடுப்பில் சமூக ஊடகங்களுக்கான பயிற்சி வகுப்பு நடைபெறுவதால் நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள், இளைஞர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி அனைத்து நிர்வாகிகள் உள்ளிட்ட அனைத்து சார்பு அணி தலைவர்கள், துணைத் தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் இதில் கலந்துகொள்ள வேண்டுகிறேன்.

**துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ.**
செயலாளர், தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க.



தமிழ்நாடு முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க , திருவிடைமருதூர் சட்டமன்ற தொகுதி, வேப்பத்தூர் பேரூராட்சியில் ,தமிழர் திருநாள் தைப்பொங்கல் விழாவை முன்னிட்டு அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் பொங்கல் தொகுப்பு மற்றும் ஆயிரம் ரூபாயை தமிழ்நாடு அரசு தலைமைக் கொறடா முனைவர் கோவி. செழியன் வழங்கினார். உடன் வேப்பத்தூர் பேரூர் கழக செயலாளர் வ.மகாலிங்கம், பேரூராட்சி மன்ற தலைவர் திருமதி அஞ்சம்மாள், பேரூராட்சி மன்றத் துணைத் தலைவர் திருமதி.சுதா ராமச்சந்திரன், மாவட்ட மகளிர் அணி நிர்வாகி திருமதி ஜெயலட்சுமி, ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் ராஜதுரை, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# ராமர் கோயில் திறப்பு விழா புறக்கணிப்பு !

புதுடெல்லி, ஜன.13–

ராமர் கோயில் திறப்பு விழாவை புறக்கணிப்பதாக காங்கிரஸ்உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் அடுத்தடுத்து அறிவித்துள்ளன.

உத்தரப்பிரதேச மாநிலம் அயோத்தியில் வரும் 22ம் தேதி நடக்கும் ராமர் கோயில் திறப்பு விழா, ஆன்மிக விழா அல்ல என்றும் பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ். ஏற்பாடு செய்துள்ள அரசியல் விழா என்று காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

கட்டுமானப் பணி முழுமையாக முடியாத நிலையில், ஆர். எஸ்.எஸ். மற்றும் பா.ஜ.க. தலைவர்கள், தேர்தல் ஆதாயத்துக்காக அவசரமாக ராமர் கோயில் திறப்பு விழாவை நடத்துவதாக காங்கிரஸ் கூறியுள்ளது.

ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க. நிகழ்ச்சி என தெளிவாக தெரிவதால், மல்லிகார்ஜுன கார்கே, சோனியா காந்தி, ஆதிர் ரஞ்சன் சவுத்ரி ஆகியோர் பங்கேற்க மாட்டார்கள் என்று காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

# நாகை மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி பயிற்சி வகுப்பு!

## மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் அறிவிப்பு!



நாகை ஜன. 13-

நாகை மாவட்டச் செயலாளர் என்.கௌதமன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

நாகை மாவட்டத்தில் தலைமை கழகம் அறிவித்துள்ள தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணியின்முன்னெடுப்பில் இன்று (13.1.2024 - சனிக்கிழமை) காலை 9.00 மணிக்கு நாகையில் புதிய பேருந்து நிலையம் அருகே உள்ள யாழிசை திருமண மஹாலில் மாவட்ட அளவிலான சமூக ஊடகங்களுக்கான பயிற்சி வகுப்பு நடைபெறுகிறது.

எனவே கீழே குறிப்பிட்டுள்ள அணிகளான இளைஞரணி, மாணவரணி, மகளிர் அணி, தொண்டர் அணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி விளையாட்டு மேம்பாட்டு அணி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி உள்ளிட்ட கழக சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொள்ள வேண்டும் இந்த ஆலோசனை கூட்டத்தில் மாநில மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கழகச் செயலாளர் ஆகியோர் இதில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



திருச்சிராப்பள்ளி மாவட்டம், தொட்டியம் வட்டம், எம்.களத்தூர் கிராமம், தலைமலைப்பட்டி அரசு உயர்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்ற சிறப்பு மனு நீதி நாள் முகாம் நிறைவு விழாவில் முசிறி சட்டமன்ற உறுப்பினர் ந.தியாகராஜன், முசிறி வருவாய் கோட்டாட்சியர் செ.ராஜன் ஆகியோர் பல்வேறு துறைகளின் சார்பில் 749 பயனாளிகளுக்கு ரூ.1.15 கோடி மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி, அரசு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டார்கள். இந்நிகழ்வுகளில், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) செல்வம், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் கோ.தவச்செல்வம், கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் திருமதி. எஸ்தர்ஷீலா, தொட்டியம் வருவாய் வட்டாட்சியர் ப.கண்ணாமணி, தொட்டியம் ஒன்றியக் குழுத்தலைவர் திருமதி.செ.கிருஷ்ணவேணி, ஒன்றியக் குழு துணைத் தலைவர் எம்.சத்தியமூர்த்தி, மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் சுந்தரராஜன், எம்களத்தூர் ஊராட்சித் தலைவர் எம்.தண்டபாணி, அரசுத்துறை உயர் அலுவலர்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனை எதிரில் உள்ள கூட்டுறவு நியாய விலைக் கடையில் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் தொகுப்பான ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, ஒரு முழு கரும்பு, 1000 ரூபாய் ரொக்க பணம் ஆகியவற்றை கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளரும், பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான மதியழகன் எம்.எல்.ஏ. குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கி துவக்கி வைத்தார். இதனை தொடர்ந்து பர்கூர், காரக்குப்பம் , காவேரிப்பட்டணம், எர்ரஅள்ளி, பையூர் ஜெகதாப், தட்ரஅள்ளி உள்ளிட்ட இடங்களில் பொங்கல் பரிசுத் தொகை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மணிமேகலை நாகராஜ், நகர் மன்ற தலைவர் பரிதா நவாப், கூட்டுறவு துறை துணை பதிவாளர் சுந்தரம், நகர செயலாளர் நவாப், மாவட்ட துணை செயலாளர் சாவித்திரி கடலரசு மூர்த்தி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் கிருபாகரன் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

## தொழில் நுட்பத்தின் துணைகொண்டு - அனைவரையும் உள்ளடக்கிய

# வளமான வருங்காலம் படைக்க ஒன்றிணைவோம்!

## ‘டீல்ஸ்’ திட்ட தொடக்க விழாவில் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!

சென்னை, ஜன.13 -

**“தொழில் நுட்பத்தின் துணை கொண்டு ஒளி மயமான, அனைவரையும் உள்ளடக்கிய வளமான வருங்காலத்தைப் படைக்க நாம் அனைவரும் ஒன்றிணைவோம்” என்று டீல்ஸ் திட்ட தொடக்க விழாவில் உரையாற்றுகையில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் குறிப்பிட்டார்.**

சென்னையில் 2024 ஜனவரி 11 அன்று பள்ளிக் கல்வித்துறை சார்பில் நடைபெற்ற ‘டீல்ஸ்’ திட்ட தொடக்க விழாவில், கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

“ ‘டீல்ஸ்’ திட்டத்தின் தொடக்க விழாவான இன்று, உங்கள் முன்னால் நான் மிகுந்த பெருமையுடனும் மகழ்ச்சியுடனும் நின்றுகொண்டிருக்கிறேன்.

வருங்காலத்துக்குத் தேவையான டிஜிட்டல் திறன்களை நமது உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு வழங்கும் இந்தப் பயணத்தை மேற்கொண்டதற்காக பள்ளிக் கல்வித் துறைக்கு என் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை மற்றும் மைக்ரோசாஃப்ட் நிறுவனத்தின் ‘டெக்னாலஜி எஜுகேஷன் அண்ட் லேர்னிங் சப்போர்ட்’ (டீல்ஸ்) திட்டம் ஆகியவை இணைந்து நடத்தும் இந்தப் பணி, கல்வித் துறையில் டிஜிட்டல் புரட்சியையும், புதுமையான முறையில் கற்றுக்கொள்ளலையும் உறுதி செய்யும்.

தமிழ்நாடு அரசு மற்றும் மைக்ரோசாஃப்ட்டின் இந்த முயற்சி, நமது மாநிலத்தில் உள்ள ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் திறன்களை உயர்த்துவதில் மிக முக்கியமான கட்டத்தை அடைந்திருக்கிறது.

### உயர்ந்த இடத்தில் மாநில கல்வித் துறை!

இந்தச் சமயத்தில், நமது ‘திராவிட மாடல் அரசு’ நமது மாநிலத்தில் கல்வித் துறையை உயர்ந்த இடத்துக்கு அழைத்துச் சென்றிருக்கிறது என்பதைக் கூற விரும்புகிறேன்.

நாட்டிலேயே முதன்முறையாக, நமது முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்கள்தான், தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பக் கொள்கையை அறிமுகப்படுத்தினார். அதன் காரணமாக, நமது அரசுப் பள்ளிகளில் கணினிக் கல்வி கற்க வழி ஏற்பட்டது.

இன்று, நமது முதலமைச்சர் அவர்களின் முன்னெடுப்புகளால், பள்ளிகளில் கணினி சார்ந்த கல்வித் திட்டம் கற்பிக்கப்படுகிறது.

கடந்த சில ஆண்டுகளாக, நமது பள்ளிகளில் கரும்பலகைகளுக்குப் பதிலாக ஸ்மார்ட் வகுப்பறைகளைக் கொண்டு வந்திருக்கிறோம்.

அது மட்டுமல்லாது, நமது முதலமைச்சர் அவர்கள், பள்ளிக் கல்வியை அடுத்த கட்டத்துக்குக் கொண்டு செல்ல பல்வேறு சீரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

மிக முக்கியமாக, அரசு தொடக்கப் பள்ளிகளில் முதலமைச்சர் காலை உணவுத் திட்டத்தின் மூலம், 17 ஆயிரம் பள்ளிகளில், ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரையிலான 34 இலட்சம் மாணவர்கள் தினமும் காலை உணவுத் திட்டத்தின் கீழ் பயன்பெற்று வருகிறார்கள்.



அதேபோல, ‘புதுமைப்பெண் திட்டம்’ மூலம், அரசுப் பள்ளிகளில் பயின்ற மாணவிகள், உயர்கல்வி கற்க கல்லூரிகளுக்குச் செல்லும்போது அவர்களுக்கு மாதந்தோறும் 1,000 ரூபாய் ஊக்கத் தொகையாக வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின் மூலம் 2 இலட்சத்து 73 ஆயிரம் மாணவிகள் பயன்பெற்று வருகிறார்கள்.

இங்கு நிறைய அரசுப் பள்ளி மாணவ - மாணவியர்களும் வந்திருக்கிறீர்கள். நம்முடைய அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களுக்கெல்லாம் நீங்களும் - உங்கள் வளர்ச்சியுமே சான்றாக உள்ளன.

### கற்றல் இடைவெளி பெருமளவில் குறைப்பு!

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்த இல்லம் தேடி கல்வி திட்டம், பேரிடர் நேரத்தில் மிகப்பெரிய அளவில் மாணவர்களுக்கு உதவியது. ‘எண்ணும் எழுத்தும்’ திட்டம் கற்றல் இடைவெளியை பெரிய அளவில் குறைத்துள்ளது.

அனைவருக்கும் ஐ.ஐ.டி. (IIT) திட்டம், அரசுப் பள்ளி மாணவர்களை ஐஐடி போன்ற உயர் கல்வி நிறுவனங்களில் சேர வழிவகை செய்கிறது.

அரசுப் பள்ளிகளில் செயல்பட்டு வரும், பள்ளி மேலாண்மை குழுக்களை மறு கட்டமைப்பு செய்வதற்காக “ நம் பள்ளி நம் பெருமை” திட்டத்தை நம் சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதியில் உள்ள லேடி வில்லிங்டன் பள்ளியில் முதலமைச்சர் அவர்கள் 2022ஆம் ஆண்டு தொடங்கி வைத்தார்கள்.

நேற்று முன் தினம் கூட, முன்னாள் அரசுப் பள்ளி மாணவர்களை ஒருங்கிணைத்து அவர்கள் படித்த பள்ளிகளை மேம்படுத்திடும் விதமாக விழுதுகள் எனும் முன்னெடுப்பை தொடங்கி வைத்தோம்.

நமது முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த ‘நான் முதல்வன்’ திட்டம், உயர் கல்விக்குச் செல்லும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு மிகச் சிறந்த வழி காட்டுதல்களை வழங்கி வருகிறது. அதோடு, திறன் சார்ந்த படிப்புகளையும் ‘நான் முதல்வன்’ திட்டம் வழங்கி வருகிறது. இதனால் வருங்காலத்தில் தொழில்துறையினர் எதிர்பார்க்கும் திறன்களை நமது மாணவர்கள் கொண்டிருக்க முடியும்.

ஆசிரியர்கள்தான் நமது வருங்காலத்தின் சிற்பிகள் என்பதை நம்புகிறோம். எனவே அவர்களுக்கு ‘ஆர்டிஃபீஷியல் இன்டெலிஜென்ஸ்’ (செயற்கை நுண்ணறிவு) போன்ற துறைகளில் பயிற்சி அளிக்கிறோம். அதன் மூலம், கரும்பலகைகளில் மட்டுமே பாடம் நடத்திக் கொண்டிருப்பதில் இருந்து விடுபட்டு, நவீனமான, புதிய முறைகளில் அவர்களால் மாணவகளுக்குப் பாடங்களைக் கற்பிக்க இயலும்.

### மாணவர்கள் திறனுக்கு ஏற்ப கற்பித்தல் முறை!

வழக்கமான கற்பிக்கும் முறைகளில் இருந்து விலகி, தங்களின் எல்லைகளை விரிவாக்கிக் கொள்ள ஆசிரியர்களுக்கு ஆர்டிஃபீஷியல் இன்டெலிஜென்ஸ் உதவுகிறது. இதன் வாயிலாக, ஒவ்வொரு மாணவரின் திறனையும் பலத்தையும் அறிந்து, அவர்களுக்கு ஏற்றாற் போன்று கற்பித்தல் முறைகளை வடிவமைத்துக்கொள்ள ஆசிரியர்களால் முடியும்.

இது ஆசிரியர்களின் கற்பித்தல் திறன்களை வளப்படுத்துவதோடு, கற்பித்தல் எனும் பயணத்தை, தொடர் பரிசோதனை முயற்சிகளுக்கும் வளர்ச்சிக்கும் உட்படுத்துகிறது.

‘டீல்ஸ்’ போன்ற முன்னெடுப்புகள் மூலம், நாம் டிஜிட்டல் இடைவெளிகளைக் குறைத்து வருகிறோம். உலகம் டிஜிட்டல் மையமாகி வரும் சூழலில், இது போன்ற முயற்சிகள் பலமான அடித்தளத்தை நமது மாணவர்களுக்கு உருவாக்கித் தருகின்றன.

அரசும் தொழில்துறையும் இணைந்து செயல்படும்போது எப்படிப்பட்ட அதிசயங்கள் உருவாகும் என்பதற்கு எடுத்துக்காட்டாக இந்தத் திட்டம் திகழ்கிறது. நமது கல்வி, புத்தாக்க முயற்சிகள் மற்றும் இளைஞர்களின் வருங்காலம் ஆகியவற்றுக்காக அரசும், மைக்ரோசாஃப்ட் போன்ற நிறுவனங்களும் சரிசமமான அர்ப்பணிப்புணர்வுடன் செயலாற்றுகின்றன.

அரசும் தொழில் துறையும் இணைந்து, தடைகளைத் தகர்த்து, எண்ணற்றவர்களின் வாழ்க்கையை மாற்றுகிற வாய்ப்புகளை உருவாக்கித் தருகின்றன.

இந்த முயற்சியில் முன்னணியில் நிற்கிற ஆசிரியர்களே, உங்களுடைய ஆர்வத்துக்கும் ஈடுபாட்டுக்கும் நான் தலைவணங்குகிறேன்.

அடுத்த தலைமுறை கண்டுபிடிப்பாளர்களுக்கும், பிரச்சினைகளுக்குத் தீர்வு சொல்கிறவர்களுக்கும் வழிகாட்டுதல்கள் வழங்குவதில் உள்ள உங்களுடைய பங்களிப்பு, விலை மதிப்பற்றது.

### கற்பதற்கான ஈடுபாடு அதிகரிப்பு!

கற்பித்தலில் உள்ள புதிய நுட்பங்களையும் முறைகளையும் ஏற்றுக்கொள்கிற உங்களின் ஆர்வத்தினால் உங்களது கற்பித்தல் முறை வளமாவதோடு, உங்களது மாணவர்கள் மத்தியில் கற்றுக் கொள்வதற்கான ஈடுபாட்டையும் அதிகரிக்கிறது.

மாணவர்களுக்கு நான் சொல்ல விரும்புவது, நீங்கள் எல்லோரும் ஒரு புதிய பயணத்தை மேற்கொள்வதற்கான புள்ளியில் நின்றுகொண்டி ருக்கிறீர்கள்.

இந்தத் திட்டம் தொடங்கப்படும் இந்த நாளில், உண்மையான வளர்ச்சி என்பது அறிவைத் தேடிச் சேகரிப்பதிலும், அதனை மனிதநேயத்துடன் செயல்படுத்துவதிலும்தான் இருக்கிறது என்பதை நினைவில் கொள்வோம்.

கல்வித்துறையில் இளைய மனங்களை ஒரு மாபெரும் புரட்சிக்குத் தயார்படுத்தி வருகிறது தமிழ்நாடு. கல்வித்துறையில் புதிய தொழில்நுட்பங்களை ஏற்றுக்கொள்வதன் மூலம், நாம் ஆசிரியர்களை விட்டு விலகுகிறோம் என்று அர்த்தம் அல்ல. மாறாக, அவர்களை ஆசிரியர்கள் என்ற இடத்திலிருந்து வழிகாட்டிகள் எனும் நிலைக்கு உயர்த்துகிறோம்.

கற்பனைத் திறனை வளர்த்துக் கொள்வதற்கும், பிரச்சினைகளுக்கு நவீனமான வழிகளில் தீர்வு காண்பதற்கும் தொழில்நுட்பம் மிகுந்த உதவியாக உள்ளது. காலத்துக்கேற்றாற் போல் மாணவர்கள் தங்களைத் தகவமைத்துக் கொள்வதற்கும், புத்தாக்க முயற்சிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வதற்கும் தேவையான திறன்களை தொழில்நுட்பம் வழங்குகிறது.

அடுத்த தலைமுறை தலைவர்கள், கண்டுபிடிப்பாளர்கள் மற்றும் மாற்றத்தின் தூதுவர்கள் ஆகியோரை உருவாக்குவதற்கு செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தை உங்களது நண்பராக நீங்கள் கருத வேண்டும் என்று ஆசிரியர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

உங்களுக்குள் என்ன திறன்கள் ஒளிந்திருக்கின்றன என்பதை அறிந்துகொள்ள, இந்தத் தொழில்நுட்பத்தை ஒரு கருவியாக நீங்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று மாணவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

### திறமைகளை வெளிக்கொணர்வீர்!

கட்டற்ற கல்வி, ஒளிபடைத்த மனங்கள், காணுமிடமெல்லாம் புதுமை என்ற இலக்குகளை நோக்கி நாம் அனைவரும் பயணிப்போம்.

நாம் கற்கும் ஒவ்வொரு பாடத்தையும், நாம் பெறும் ஒவ்வொரு அனுபவத்தையும் ஆர்வத்துடன், உற்சாகத்துடன் எதிர்கொள்ள இந்த வாய்ப்பை நாம் பயன்படுத்திக் கொள்வோம்.

அரசும் தொழில்துறையும் கைகோர்க்கும் இந்தக் கூட்டணியை உருவாக்கிய அனைவருக்கும் என்னுடைய நன்றியை இந்தத் தருணத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். தொழில்நுட்பத்தின் துணை கொண்டு, ஒளிமயமான, அனைவரையும் உள்ளடக்கிய வளமான வருங்காலத்தைப் படைக்க நாம் அனைவரும் ஒன்றிணைவோம்.

பள்ளிக் கல்வித் துறையில் ஒவ்வொரு நாளும் புதிய புதிய திட்டங்களை அறிமுகப்படுத்தி, மாணவர்களின் வளர்ச்சிக்குப் பாடுபட்டு வரும் பள்ளிக்கல்வித் துறை அமைச்சருக்கு என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். கல்வி முக்கியம் என்று தந்தையின் இடத்திலிருந்து நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எப்போதும் சொல்லி வருகிறார்கள். அதன்படி நீங்கள் அனைவரும் கல்வியில் கவனம் செலுத்த வேண்டும்.

கல்வித்துறையில் புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தும் அதே நேரத்தில், ஒரு விளையாட்டுத் துறை அமைச்சர் என்ற முறையில், மாணவர்களை பி.டி.பீரியடுகளின் போது விளையாட அனுமதிக்க வேண்டும் என்று ஆசிரியர்களைக் கேட்டுக்கொள்கிறேன். பி.டி.பீரியடுகளைக் கடன் வாங்கி பாடங்களை நடத்தாதீர்கள் என்பதை நான் இங்கே ஒரு கோரிக்கையாகவே வைக்கிறேன்.

‘டீல்ஸ்’ முன்னெடுப்பு வெற்றி பெறவும் - மாணவர்களின் மேன்மைக்கு துணை நிற்கவும் என்னுடைய வாழ்த்துகளை மீண்டும் ஒரு முறை தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் பள்ளிக்கல்வித் துறை செயலாளர் ஜே.குமரகுருபரன். ‘நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி’ உறுப்பினர் செயலர் ஆர்.சுதன் நிர்மான் டீம், இணை முதன்மைச் செயல் அலுவலர் உமா கேசனி, ஜீக் மைண்ட்ஸ் முதன்மைச் செயல் அலுவலர் கணேஷ் கோபாலகிருஷ்ணன், டேட்டா அண்ட் ஆர்டிஃபீஷியல் இன்டெலிஜென்ஸ், மைக்ரோசாஃப்ட், இயக்குநர் சிசில் சுந்தரம் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

---

### மயிலாடுதுறை மாவட்டத்தில் 510 பயனாளிகளுக்கு

## திருமண நிதியுதவி - தாலிக்குத் தங்கம்! அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் வழங்கினார்!

### நிவேதா எம். முருகன் எம்.எல்.ஏ. - எம். ராமலிங்கம் எம்.பி. - எம்.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

*மயிலாடுதுறை, ஜன. 13 -*

*மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறை ஒன்றியம் திருஇந்தளூரில் மாவட்ட சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் 510 பயனாளிகளுக்கு ரூ.4 கோடியே 52 இலட்சத்து, 2 ஆயிரத்து 973 மதிப்பிலான திருமண நிதியுதவியுடன் கூடிய தாலிக்குத் தங்கத்தினை சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் வழங்கினார்.*

*மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறை ஒன்றியம், திருஇந்தளூர், பத்மவாசன் கல்யாண மண்டபத்தில் மாவட்ட சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் நிதி உதவியுடன் கூடிய தாலிக்கு தங்கம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது நிகழ்ச்சிக்கு மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.பி.மகாபாரதி தலைமை தாங்கினார். மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம் முருகன் மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ. ராமலிங்கம் சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியில் 510 பயனாளிகளுக்கு ரூ.4 கோடியே 52 இலட்சத்து, 2 ஆயிரத்து 973 மதிப்பிலான திருமண நிதியுத வியுடன் கூடிய தாலிக்குத் தங்கத்தினை சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் திரு.சிவ.வீ. மெய்யநாதன் வழங்கினார்*

*நிகழ்ச்சியில் திமுக தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஜி.என். ரவி, மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் மு.ஞான வேலன். எல். செல்வமணி, மாவட்டக் கழக பெருளாளர் மகா அலெக்சாண்டர், மயிலாடுதுறை நகர செயலாளர் நகர் மன்ற தலைவர் குண்டாமணி (எ) செல்வராஜ், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் என் இளைய பெருமாள், அமுர் த.விஜய குமார், ஞான. இமையநாதன், பி.முருகமணி ஏ.ஜி. ஜெ.பிரபாகர், மங்கை எம். சங்கர், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம். ஸ்ரீதர், பொதுக்குழு உறுப்பினர் பி.கென்னடி, மாவட்ட ஊராட்சி தலைவர் உமாமகேஸ்வரிசங்கர், ஒன்றிய குழு தலைவர்கள் காமாட்சி மூர்த்தி, மகேந்திரன், ஜெயபிரகாஷ், நந்தினி ஸ்ரீதர், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் தியாகராஜே ஸ்வரன், மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் தீபா பயனாளிகளுக்கு தாலிக்குத் தங்கம் வழங்கி சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் பேசுகையில்:*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முதலமைச்சராக பதவி ஏற்ற நாள் முதல் பல சாதனைகள் செய்து வருகிறார். குறிப்பாக பெண்களுக்கு இலவச பேருந்து பயணத்திட்டம், புதுமைப் பெண் திட்டம், கலப்புத் திருமண நிதியுதவித் திட்டம், 2 பெண் குழந்தை நிதியுதவித் திட்டம் என பெண்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் மிகச் சிறப்பாக செய்து வருகிறார். அதன்படி மயிலாடுதுறை மாவட்டத்தில் சமுக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில், அன்னைதெரசா ஆதரவற்றோர் பெண்களுக்கான திருமண நிதி உதவி திட்டம் ,அன்னைதெரசா ஆதரவற்றோர் பெண்களுக்கான திருமண நிதி உதவி திட்டம், விதவை மறுமணம் திருமண நிதி உதவி திட்டம் ,விதவை மறுமணம் திருமண நிதி உதவி திட்டம் ,டாக்டர் முத்து லெட்சுமி திருமண நிதி உதவி திட்டம், டாக்டர் முத்துலெட்சுமி திருமண நிதி உதவி திட்டம், ஈ.வெ. ரா மணியம்மையார் விதவை மகள் திருமண நிதி உதவி திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் 510 பயனாளிகளுக்குரூ.2,36,27,973.60 மதிப்பில் 4080 கிராம் தங்கமும், பட்டப்படிப்பு நிறைவு செய்தவர்களில் 353 நபர்களுக்கு ரூ.1,76,50,000 திருமண நிதியுதவியும், பள்ளிப்படிப்பு நிறைவு செய்தவர்களில் 157 நபர்களுக்கு ரூ.39,25,000 திருமண நிதியுதவியும் ஆகமொத்தம் ரூ.4 கோடியே 52 இலட்சத்து, 2 ஆயிரத்து 973 மதிப்பிலான திருமண நிதியுதவியுடன் கூடிய தாலிக்குத் தங்கம் இன்றைய தினம் வழங்கப்படுகிறது.பெண்களின் வாழ்க்கை தரம் உயர்வதற்கு தேவையான பல்வேறு நலத்திட்டங்களை தமிழ்நாடு முதலமைச்சர் செயல்படுத்தியுள்ளார்கள். புதுமைப்பெண் திட்டத்தின் கீழ் உயர் கல்வி பயிலும் மாணவிகளுக்கு 2023 24 ம் ஆண்டில் மாதம் ரூ.1000 வீதம் 1217 மாணவிகளுக்கு ரூ.1கோடியே,21 லட்சத்து,20 ஆயிரம் வழங்கப்படுகிறது.அரசின் திட்டங் கள் கடைகோடி பகுதி மக்களுக்கும் சென்றடையும் வகையில் நலத்திட்டங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு செயல் ல்படுத்தி வருகிறது இவ்வாறு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் பேசினார்.*

*தொடர்ந்து, மக்களுடன் முதல்வர் சிறப்பு முகாம் திட்டத்தின் கீழ் 5 பயனாளிகளுக்கு புதிய மின் இணைப்பு ஆணையையும், 5 பயனாளிகளுக்கு மின் இணைப்பு பெயர் மாற்றம் ஆணையையும் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் வழங்கினார்கள்.*



பள்ளிக் கல்வித்துறையில் உள்ளது போல் தொடக்கக் கல்வித் துறையிலும் ஆசிரியர்களுக்கு மாநில அளவிலான மூதுரிமை கடைபிடிக்கப்படும் என்று வெளியிடப்பட்டுள்ள அரசாணை 243 க்கு தலைமைச் செயலகத்தில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யா மொழியை தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கத்தின் மாநில தலைவர் கு.தியாகராஜன் தலைமையில் நிர்வாகிகள் சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

---

## விடுமுறை நாட்களுக்குப் பிறகு பத்திரப்பதிவுகளுக்கு கூடுதல் டோக்கன்!

### பத்திரப்பதிவுத்துறை அறிவிப்பு!

*சென்னை, ஜன.13 -*

*தைப்பொங்கலை (15.1.2024) அடுத்து வரும் நாட்களில் அதிக அளவில் ஆவணங்கள் பதிவுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுவதால் பொங்கலை ஒட்டிய விடுமுறை நாட்கள் முடிந்து அடுத்த வேலை நாளான 18.01.2024 முதல் 31.1.2024 வரையிலான காலத்தில் வரும் அனைத்து வேலை நாட்களிலும் அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களிலும் கூடுதலாக பதிவு டோக்கன்கள் வழங்குமாறு வணிகவரி மற்றும் பதிவுத்துறை செயலர் ஜோதி நிர்மலாசாமி உத்தரவிட்டுள்ளார்.*

*ஒரு சார்பதிவாளர் உள்ள அலுவலகங்களுக்கு 100க்கு பதிலாக 150 டோக்கன்களும், இரண்டு சார்பதிவாளர்கள் உள்ள அலுவலகங்களுக்கு 200-க்கு பதிலாக 300 டோக்கன்களும் வழங்கப்படும். மேலும் தற்போது வழங்கப்படும் 12 தட்கல் டோக்கன்களின் எண்ணிக்கை 20-ஆக உயர்த்தப்படும்.*



மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறை ஒன்றியம் திருஇந்தளூரில் மாவட்ட சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் 510 பயனாளிகளுக்கு ரூ.4 கோடியே 52 இலட்சத்து, 2 ஆயிரத்து 973 மதிப்பிலான திருமண நிதியுதவியுடன் கூடிய தாலிக்குத் தங்கத்தினை சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் வழங்கினார். உடன் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும். பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன், மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் எம். ராமலிங்கம், சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ. பி.மகாபாரதி, தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி. எம். ஸ்ரீதர், ஊராட்சி தலைவர் உமாமகேஸ்வரி சங்கர், மயிலாடுதுறை நகர செயலாளர் நகர மன்ற தலைவர் உண்டாமணி (எ) செல்வராஜ், மயிலாடுதுறை ஒன்றியக் குழு தலைவர் காமாட்சி மூர்த்தி, ஒன்றிய கழக செயலாளர் ஞான ‘இமய நாதன் ப .முருகு மணி மற்றும் பலர் உள்ளனர்.



சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நீலகிரி மாவட்டம் அதிகரட்டி தேர்வு நிலை பேரூராட்சிக்குட்பட்ட முட்டிநாடு கிராமத்தில் ரூ.98.70 இலட்சம் மதிப்பிலான தடுப்புச் சுவருடன் கூடிய கான்கிரீட் சாலையை திறந்துவைத்தார். உடன் நீலகிரி மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி கீர்த்தி பிரியதர்ஷினி, அரசு அதிகாரிகள்,பேரூராட்சி மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், ஒரத்தநாடு கால்நடை மருத்துவக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தை மீன்வளம், மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.இராதாகிருஷ்ணன் ஆய்வு செய்தார். உடன் மாவட்டக் கழகச் செயலாளர்கள் துரை. சந்திரசேகரன் எம்.எல்.ஏ, கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ, மாவட்ட ஆட்சியர் தீபக் ஜேக்கப், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் உஷா புண்ணியமூர்த்தி, தஞ்சை துணை மேயர் மரு.அஞ்சுகம் பூபதி, ஒரத்தநாடு கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர். நர்மதா, கால்நடைத்துறை மண்டல இணை இயக்குநர் மரு.க.தமிழ்செல்வம், மீன் வளத்துறை உதவி இயக்குநர் மணிகண்டன், ஒரத்தநாடு ஒன்றியக் குழுத் தலைவர் சி.பார்வதி சிவசங்கர் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### புதுக்கோட்டை தெற்கு மாவட்ட

# தகவல் தொழில் நுட்ப அணி பயிற்சி வகுப்பு!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் எஸ்.ரகுபதி அறிவிப்பு!



புதுக்கோட்டை, ஜன. 13 -

புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும், சட்டத் துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு: -

கழக தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, கழக இளைஞரணிச் செயலாளர், இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைபடி,

தலைமைக் கழகம் அறிவிப்பின்படி கழக தகவல் தொழில்நுட்ப அணியின் முன்னெடுப்பில் மாவட்ட கழகங்கள் நடத்தும் மாவட்ட அளவிலான "சமூக ஊடகங்களுக்கான பயிற்சி வகுப்பு புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழகம் "சமூக ஊடகங்களுக்கான பயிற்சி வகுப்பு" இன்று (13.01.2024) காலை 9.00 மணிக்கு புதுக்கோட்டை மாலையீடு கற்பக விநாயகர் மண்டபம் (எஸ்.ஆர் மஹால்) ஏசில் நடைபெறகிறது. இப்பயிற்சி வகுப்பில் கழக இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, தொண்டர் அணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, பொறியாளர் அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி விவசாய தொழிலாளர் அணி, விவசாய அணி, வர்த்தகர் அணி, மீனவர் அணி,மருத்துவ அணி, நெசவாளர் அணி, சுற்றுச்சூழல் அணி, சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு, கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை, இலக்கிய அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, அயலக அணி ஆகிய அனைத்து அணிகளின் தலைவர் துணை தலைவர் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் அனைவரும் கட்டாயம் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பு :

1.அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் தங்களது அணியின் தலைவர் துணை தலைவர் மற்றும் துணை அமைப்பாளர்களிடம் இத்தகவலை தெரிவித்து இப்பயிற்சி வகுப்பில் கண்டிப்பாக அனைவரும் கலந்து கொள்ள செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

2.அனைத்து அணிகளின் தலைவர், துணை தலைவர் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் அனைவரும் அரங்கத்திற்கு சாரியாக 9.00 மணிக்கு முன்னரே வருகை தந்து தலைமைக் கழகத்தின் ஆன்லைன் வருகை பதிவேட்டில் தங்களது பெயர்களை கட்டாயம் பதிவு செய்துகொள்ள வேண்டும்.

3.புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணியின் அனைத்து மாவட்ட, மாவட்ட துணை, தொகுதி, ஒன்றிய,நகர, பேரூர் (களப் பணி சமூகவலைதளம் மகளிர்) ஒருங்கிணைப்பாளர்கள் இன்று (13.01.2024) காலை 8.00 மணிக்குள் புதுக்கோட்டை மாலையீடு கற்பக விநாயகர் மண்டபம் (எஸ்.ஆர் மஹால்) அரங்கத்திற்கு வருகை தர வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### திண்டுக்கல்லுக்கு

# பொங்கல் திருநாளை முன்னிட்டு 150 சிறப்பு பேருந்துகள் இயக்கம்!

திண்டுக்கல், ஜன. 13-

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு சென்னையிலிருந்து திண்டுக்கல், தேனி, பழநி ஆகிய பகுதிகளுக்கு பயணிகள் செல்வதற்கு 150 சிறப்பு பேருந்துகளும் மீண்டும் சொந்த ஊரிலிருந்து சென்னை செல்வதற்கு 150 சிறப்பு பேருந்துகளும் இயக்கப்பட உள்ளன.

மேலும் திருப்பூர் 50, கோவை 75, திருச்சி 30 மற்றும் இதர ஊர்களுக்கு 50 பேருந்துகளும் மற்றும் கூட்டத்தேவைக்கேற்ப கூடுதல் பேருந்துகள் இயக்கப்பட உள்ளன.

திண்டுக்கல், பழனி, திருச்சி, மதுரை ஆகிய இடங்களிலிருந்தும் அவற்றினைச் சார்ந்த பகுதிகளிலிருந்தும் சபரிமலைக்குச் செல்லும் பக்தர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதை முன்னிட்டு இப்போக்குவரத்துக் கழகத்தின் மூலம் மேற்கண்ட ஊர்களில் இருந்து குமுளிக்கு 100 சிறப்புப் பேருந்துகள் இயக்க விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட சிறப்பு பேருந்து இயக்கத்தினை கண்காணிக்க அலுவலர்கள் மற்றும் பயணச்சீட்டு ஆய்வாளர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர்.

இச்செய்தினை தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம் (மதுரை) லிமிடெட், திண்டுக்கல் மண்டல பொது மேலாளர் தெரிவித்துள்ளார்.



புதுக்கோட்டை கலைஞர் கருணாநிதி அரசு மகளிர் கலைக் கல்லூரியில், முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, "சட்டமன்ற நாயகர் – கலைஞர்" மாணவர்கள் கருத்தரங்க விழா, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் மற்றும் அரசு தலைமைக் கொறடா முனைவர் கோவி.செழியன் ஆகியோர் முன்னிலையில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஐ.சா.மெர்சி ரம்யா தலைமையில் நேற்று முன்தினம் (11.01.2024) நடைபெற்றது. உடன் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா, கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மா.செல்வி, நகரமன்றத் தலைவர் திருமதி.திலகவதி செந்தில், நகரமன்றத் துணைத் தலைவர் எம்.லியாகத் அலி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.




சென்னை இந்திய தொழில்நுட்ப கழகம் மற்றும் போயிங் நேஷனல் ஏரோ மாடலிங் நிறுவனம் இணைந்து தென்மண்டலங்களுக்கு இடையே நடத்திய ஏரோ மாடலின் போட்டியில் தமிழ்நாடு சார்பாக கலந்து கொண்டு வெற்றி பெற்ற அரசு ஆதிதிராவிடர் பள்ளி மாணவிகளை, தாட்கோ தலைமை அலுவலகத்தில், நேற்று முன்தினம் (11.1.2024) ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் பாராட்டி வாழ்த்து தெரிவித்தார். இந்நிகழ்வின் போது, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசு செயலாளர் க.லட்சுமி பிரியா, ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குனர் த.ஆனந்த், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டு கழகத்தின் மேலாண்மை இயக்குனர் க.சு.கந்தசாமி, பழங்குடியினர் நலத்துறை இயக்குனர் எஸ்.அண்ணாதுரை மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### நெசவாளர் சமூகம் மீண்டும் உயிர்த்தெழ

# பாண்டெக்ஸ், பாண்பேப் நிறுவனங்களை மீட்டெடுக்க வேண்டும்!

## புதுவை எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா அரசுக்கு வலியுறுத்தல் !



புதுச்சேரி, ஜன. 13 -

புதுவை எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

ஒரு ஜனநாயக நாட்டில் கூட்டுறவுத் துறை என்பது அடித்தளத்து மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்பாகும். புதுச்சேரி மாநிலத்தில் அத்துறை பல்வேறு கிளைகளை பரப்பி ஆயிரக்கணக்கான மக்களை வாழ வைத்த வரலாறு உண்டு. ஆனால் இன்று அத்துறையின் பல்வேறு நிறுவனங்கள் மூடு விழா கண்டு வருவது கண்கூடு. எந்த ரங்கசாமியால் கூட்டுறவு நிறுவனங்கள் வளர்த்தெடுக்கப் பட்டதாக கூறப்பட்டதோ அந்நிறுவனங்கள் அவர் காலத்திலேயே மூடப்படுவது வேதனையான ஒன்று. அந்த வழியில் இன்று பாண்டெக்ஸ் இணைந்துள்ளது.

13 கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள் இணைந்து உருவாக்கப்பட்ட பாண்டெக்ஸ் தனது உறுப்பினர்களால் மிக அற்புதமான கைத்தறி ஆடைகளை நெய்து, பண்டிகைக்கால விற்பனைக்கும், அரசுத் துறைகளுக்கு விநியோகம் செய்தும் அமோக வரவேற்பைப் பெற்றது. அப்படிப்பட்ட பாண்டெக்ஸ் இன்று மூன்று சங்கங்களை நிரந்தரமாக மூடிவைத்து, 5 சங்கங்கள் மூடுவிழாவை நோக்கி நகரச் செய்துள்ளது. இதற்கு காரணம் இடையில் அமர்த்தப்பட்ட வாரியத் தலைவர்களும், அதிகாரிகளின் நிர்வாக சீர்கேடுகளும், முரண்பட்ட கொள்கை முடிவுகளுமே ஆகும்.

அரசால் பண்டிகை காலங்களில் வழங்கப்பட்ட கைத்தறி சேலை, வேட்டிகளை பாண்டெக்ஸ் இடமிருந்து பறித்து தனியார் மில் மூலம் பாலியஸ்டர் கொள் முதல் என்பது மிகப்பெரிய மோசடியாகும். அதுவே பாண்டெக்சின் செயலின்மைக்கு அடிப்படை காரணமாகும். அடுத்து சங்கங்களுக்கு சரியான முறையில் நூல் வழங்காமலும், கண்துடைப்பிற்காக அவர்களுக்கு ஆண்டுக்கு இரண்டு மாதம் மட்டும் நூல் வழங்கி தொழிலாளர்களை ஏமாற்றி வருவதாகும்.

இதன் காரணமாக சங்கங்கள் நொடிந்து போனது மட்டுமின்றி அதில் பணியாற்றும் ஊழியர்கள் கடந்த ஐந்து ஆண்டுகளாக சம்பளமின்றி அவதியுறுவதும், ரூ. 2 கோடி அளவில் வைப்பு நிதி பாக்கி இருப்பதும், ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கு எந்த நிதியும் வழங்காமல் தண்டிப்பதுமான அவலம் அரங்கேறி வருகிறது.

அத்துடன் கைத்தறி ஏற்றுமதியை ஊக்குவித்து வந்த பாண்பேப் நிறுவனம் பாண்டெக்ஸ் நிறுவனம் ரூ. 1.5 கோடி கடன் பாக்கி வைத்ததால் அதுவும் நொடிந்து இன்று ரூ. 8 கோடி கடனில் மூழ்கிக் கொண்டுள்ளது. தரமற்ற கொள்முதல் துணிகளால் பாண்டெக்ஸ் விற்பனையகங்கள் இன்று வெறிச்சோடி கிடக்கும் அவல நிலை உள்ளது.

அரசின் இதுபோன்ற தவறான அணுகுமுறையால் பிரெஞ்ச் காலம் முதல் நெசவுத் தொழிலுக்கு பெயர் போன புதுச்சேரி இன்று அந்த தொழிலே முழுதும் முடக்கப்பட்டு நெசவாளர் குடும்பங்கள் எல்லாம் நடுத்தெருவுக்கு வந்துள்ள நிலை ஏற்பட்டுள்ளது.

ஆகவே. முதல்வர் அவர்கள் இதில் கவனம் செலுத்தி பாண்டெக்ஸ் மற்றும் பாண்பேப் நிறுவனங்களை கடன் சுமையிலிருந்து மீட்டெடுத்து சரியான நிர்வாகத் திறமையாளர்கள் மூலம் நெசவாளர் சமூகம் உயிர்த்தெழும் விதத்தில் செயல்படுத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### விழுப்புரம் அரசினர் மகளிர் மேல்நிலைப்பள்ளிகளில் நிகழ்ச்சி

# 2,470 மாணவ - மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள்!

## டாக்டர் இரா. இலட்சுமணன் எம்.எல்.ஏ. வழங்கினார்!

விழுப்புரம், ஜன.13-

கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கினங்க, விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினரும், மாநில மருத்துவ அணி இணைச் செயலாளருமான டாக்டர். இரா.இலட்சுமணன் விழுப்புரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட விழுப்புரம், அரசு மாதிரி மகளிர் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற விலையில்லா மிதிவண்டி வழங்கும் விழாவில் கலந்து கொண்டு 2,470 மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார்.

உடன் மாவட்டப் பொருளாளர் இரா.ஜனகராஜ், மாவட்ட கல்வி அலுவலர், முதன்மை கல்வி அலுவலர் அறிவழகன், அரசு பள்ளி முதல்வர்கள், நகர செயலாளர் சக்கரை, நகர் மன்றத் தலைவர் தமிழ்ச் செல்வி பிரபு, பேரூராட்சி மன்றத் தலைவர் மீனாட்சி ஜீவா, பி.டி.ஏ. தலைவர் எஸ்.ஆர்.எம். யு.பழனிவேல், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் பி.தெய்வசிகாமணி, தே.முருகவேல், க.மும்மூர்த்தி, வி.ஜி.பிரபாகரன், பேரூராட்சி செயலாளர் பா.ஜீவா,

நகர்மன்ற உறுப்பினர்கள் புல்லட் பி.மணி, மணவாளன், புருஷோத்தமன், மணிகண்டன், சாந்தராஜ், கோமதி பாஸ்கர், கன்னிகா வெற்றிவேல், பத்மநாபன், சசிரேகா பிரபு, ஜெயந்தி மணிவண்ணன், நந்தா நெடுஞ்செழியன், பொதுக் குழு உறுப்பினர் டி.என். ஜெ.சம்பத், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் இரா.கேசவன், மாவட்ட விவசாயத் தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் ஜி.தவமணி, முன்னாள் ஒன்றிய குழு பெருந்தலைவர் ஆர்.குப்புசாமி,

மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி தலைவர் நடராஜன், மாவட்ட பிரதிநிதி ஜமாலுதீன், மாவட்ட சிறுபான்மையினர் அணி துணை அமைப்பாளர் முகமது அலி, நகர மாணவர் அணி துணை அமைப்பாளர் அசாருதீன், முன்னாள் சிறுபான்மையினர் அணி துணை அமைப்பாளர் தாஹீர், நகர விவசாய அணி பாஸ்கர், என். ஆர்.மணி, நன்னாடு முத்துசாமி, வி.ஏ.ஓ. சின்னசாமி, பில்லூர் மணிவண்ணன், மாவட்ட பிரதிநிதி குணசேகரன், மாவட்ட மீனவர் அணி தலைவர் மீன் ராஜா, வார்டு செயலாளர்கள் ரகு, ஜானி, கோவிந்தராஜ், மணிவண்ணன், சுரேஷ், ஏழுமலை, சுபாஷ், பூந்தோட்டம் சண்முகம், ராஜா சம்பத், பெரியசாமி, துணை செயலாளர் லைட் ராஜேந்திரன்,

பேரூராட்சி மன்ற உறுப்பினர் வடிவேல், சசிகலா கபிரியேல், மகாலட்சுமி செந்தில் மற்றும் ஓம் ஹரி, முன்னாள் எம்.சி. சிவா, கோவில் சிவா, ஒன்றிய துணை செயலாளர்கள் ராஜசேகர், ஜெயந்தி, வழக்கறிஞர் கொடுமுடி சேரலாதன், அவைத் தலைவர் ஏ.சி. குமார், ஊராட்சி மன்ற தலைவர்கள் சரவணன், வெங்கடேசன், எம்.சி.ராம், வார்டு பிரதிநிதிகள் ரபீதீன், ராஜா, முகமது, வார்டு துணைச் செயலாளர் சக்திவேல், முத்தொப்பு ராஜி, சங்கர் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.




விழுப்புரம் மாவட்டம் மயிலம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட மயிலம் ஒன்றியம் வெங்கந்தூர் ஊராட்சியில் உள்ள நியாய விலைக் கடையில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு தமிழர்கள் நலத்துறை அமைச்சர் கே.எஸ்.செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்பினை வழங்கினார். உடன் மயிலம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சிவக்குமார், மயிலம் ஒன்றியப் பெருந்தலைவர் யோகேஸ்வரி மணிமாறன், கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப் பதிவாளர் யசோதா தேவி உள்ளனர்.




சென்னை, நந்தம்பாக்கம், வர்த்தக மையத்தில், நேற்று முன்தினம் (11.01.2024) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை சார்பில் நடைபெற்ற அயலகத் தமிழர் தினம் – 2024 விழாவில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சியினைத் திறந்து வைத்து பார்வையிட்டார். இவ்விழாவில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மருத்துவர் கலாநிதி வீராசாமி, எம்.எம்.அப்துல்லா, அயலகத் தமிழர் நல வாரியத்தின் தலைவர் கார்த்திகேய சிவசேனாபதி, பொதுத் துறை செயலாளர் க. நந்தகுமார், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் பா.கிருஷ்ணமூர்த்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### உலகத் தமிழர் நலனுக்காக உழைத்த முத்தமிழறிஞர் கலைஞர் வழியில் - வெளிநாடுவாழ் தமிழர்களுக்கு

# பல்வேறு நலத்திட்டங்களை நிறைவேற்றி வருகிறது ‘திராவிட மாடல்’ அரசு!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்!

**சென்னை, ஜன.13–**

**உலகத் தமிழர் நலனுக்காக உழைத்த முத்தமிழறிஞர் கலைஞர் வழியில் வெளிநாடு வாழ் தமிழர்களுக்கு பல்வேறு நலத் திட்டங்களை நிறைவேற்றி வருகிறது முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசு என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசுகையில் தெரிவித்தார்.**

சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் அயலக தமிழர் நல வாரியம் சார்பில் அயலக தமிழர் தின விழாவை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்து சிறப்புரை ஆற்றினார்.

அப்போது அவர் பேசியதாவது:

தாய் தமிழகம் வந்துள்ள அயலகத் தமிழர்களே, உங்கள் அத்தனை பேருக்கும் முதற்கண் என்னுடைய வணக்கத்தை நான் தெரிவித்துக் கொள்கின்றேன். உங்களையெல்லாம் சந்திப்பதிலே மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். பெருமை அடைகின்றேன். தமிழ்நாடு அயலகத் தமிழர்கள் நலன் மற்றும் மறுவாழ்வு துறையின் சார்பாக, அயலகத் தமிழர் தின நிகழ்ச்சியைத் தொடங்கி வைப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

நாளைய தினம் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்த நிகழ்விலே கலந்து கொண்டு நிறைவுரை ஆற்ற உள்ளார்கள். இந்தியாவில் இருக்கக்கூடிய மாநில கட்சிகளிலேயே அயலகத் தமிழர்களின் நலனுக்காக ‘அயலகத் தமிழர் அணி’யைத் தொடங்கியது, நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம்தான்.

இன்னும் சொல்லப்போனால், நேற்று மாலையிலிருந்து நான் இந்த அயலகத் தமிழர்களோடுதான் பயணித்துக் கொண்டிருக்கின்றேன். நேற்று மாலை அயலக அணியின் சார்பாக அயலக அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொண்டேன். இன்று இந்தத் துறையைச் சார்ந்த நிகழ்ச்சியிலே, நான் கலந்துகொள்கிறேன்.

### வழிகாட்டி வரும் தமிழ்நாடு அரசு!

இந்திய ஒன்றியத்திற்குப் பல்வேறு வழிகளில் வழிகாட்டி வரும் தமிழ்நாடு அரசு 2021--ஆம் ஆண்டில் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறையை உருவாக்கியது, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான். தன்னுடைய வாழ்நாள் முழுவதும் தமிழ்நாட்டில் வசிக்கின்ற தமிழர்களுக்காக மட்டுமல்ல, உலகமெங்கும் வசிக்கின்ற தமிழ் மொழி பேசுகின்ற அத்தனை பேருக்காகவும் உழைத்தவர்தான் நம்முடைய முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்.

அப்படிப்பட்ட கலைஞரின் நூற்றாண்டில் இன்றைக்கு இந்த நிகழ்ச்சி நடந்து கொண்டிருப்பது நமக்கு இன்னும் கூடுதல் மகிழ்ச்சி, கூடுதல் பெருமை. அதிலும் அயலகத் தமிழர் தினமானது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் அதிகம் உச்சரிக்கப்பட்ட `தமிழ் வெல்லும்’ என்கிற அந்தக் கருப்பொருளில் நடைபெற்றுக் கொண்டிருப்பது கூடுதல் மகிழ்ச்சியைத் தருகின்றது.

இந்த சிறப்புக்குரிய நிகழ்ச்சியை ஒட்டி அயலக நலத்துறை சார்பாக கடந்த மூன்று ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள் குறித்த புகைப்படக் கண்காட்சியையும் தொடங்கி வைத்து அவற்றையும் பார்த்துவிட்டுத்தான் இங்கு வந்திருக்கின்றேன்.

### தனித்தனியாகப் பயணிக்க வேண்டும்!

இரண்டு நாட்கள் நடைபெறுகின்ற இந்த நிகழ்ச்சியில் உலகம் முழுவதும் இருந்து ஆயிரக்கணக்கான தமிழர்கள் பங்கேற்று உள்ளீர்கள். குறிப்பாக சிங்கப்பூர், மலேசியா, இலங்கை போன்ற 58 நாடுகளிலிருந்து அமைச்சர்களாக, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களாக, தொழில்துறையினராக, கவிஞர்களாக வசித்து வருகின்ற தமிழர்கள் இங்கே வருகை தந்திருக்கிறீர்கள். உங்களை எல்லாம் நான் வருக வருக என்று வரவேற்கின்றேன்.

உங்களை எல்லாம் நான் சந்திக்க வேண்டும் என்றால், கிட்டதட்ட 58 நாடுகளுக்குத் தனித்தனியாக நாங்கள் பயணம் செல்ல வேண்டும். அப்படியே வந்தாலும், உங்களை சந்திப்பதற்கு நேரம் கிடைப்பது மிகவும் அரிது. ஆனால், இன்றைக்கு உங்கள் அனைவரையும் ஒரே இடத்தில் நம்முடைய தாய் திருநாட்டில் சந்திப்பது உள்ளபடியே மிகுந்த மகிழ்ச்சியும் பெருமையும் தருகின்றது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சமீபத்தில், துபாய், சிங்கப்பூர், ஜப்பான் உள்ளிட்ட நாடுகளுக்கு தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்கான பயணத்தை மேற்கொண்டார்கள்.

### வாழ்த்துகளுக்கு நன்றி!

அப்பொழுது நீங்கள் எல்லாம் அவரை சந்தித்து உங்களுடைய பாசத்தையும் அன்பையும் வெளிப்படுத்தியிருந்தீர்கள். அதற்கு இந்த நேரத்தில் தமிழ்நாட்டின் சார்பாக, எங்களுடைய நன்றியை நாங்கள் தெரிவித்துக் கொள்கின்றோம். அதேபோல், நான் வெளிநாடு



களுக்கு வரும்போதெல்லாம் என்னிடத்தில் வந்து அன்போடு விசாரித்து, உங்களுடைய இல்லத்திற்கு அழைத்து, `நல்லா இருக்கீங்களா, அப்பா– அம்மா நல்லா இருக்காங்களா?’ என்று என்னுடைய குடும்பத்தையும் விசாரித்து, எங்களுடைய ஆட்சியையும் நீங்கள் வாழ்த்தி இருக்கிறீர்கள். அதற்கும் இந்த நேரத்திலே நான் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

நான் விளையாட்டுத் துறைக்கு அமைச்சராக இன்றைக்கு நான் உங்கள் முன் பேசிக் கொண்டிருக்கின்றேன். இந்த நேரத்தில் ஒரு விஷயத்தை நான் குறிப்பிட விரும்புகின்றேன். நம்முடைய தமிழ்நாட்டு விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் உலகம் முழுவதும் நடைபெறுகின்ற பல்வேறு சர்வதேசப் போட்டிகளில் பங்கேற்க உலகின் பல்வேறு நாடுகளுக்கு பயணமேற்கொள்கிறார்கள். அப்படிப் பங்கேற்பதற்காக நீங்கள் இருக்கக்கூடிய நாடுகளுக்கு வரும்பொழுது அவர்களை களத்தில் ஊக்குவிப்பவர்களாக, உற்சாகப்படுத்துபவர்களாக நீங்கள் இருக்கிறீர்கள். அதற்கு இந்த நேரத்தில் விளையாட்டுத் துறையின் சார்பாக என்னுடைய அன்பையும், நன்றியையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

### அயலகத் தமிழர் நல வாரியம்!

இதுபோன்ற சந்திப்புகள் உண்மையில், நமக்கு இடையேயான பாசத்தை இன்னும் அதிகமாக்கும் என்று நான் நம்புகின்றேன். அயலகத் தமிழர்கள் நலனில், நம்முடைய கழக அரசு மிகுந்த அக்கறையுடன் செயல்பட்டு வருகின்றது. அதற்கு ஒரு உதாரணமாகத்தான் `அயலகத் தமிழர் நல வாரிய’த்தை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்திருப்பது.

பண்டைய காலத்தில் தமிழகம் உலகெங்கும் பரவி வாழ்ந்தார்கள். அதேபோன்ற ஒரு நிலை கடந்த 20 ஆண்டுகளில் 25 ஆண்டுகளில் மிகவும் அதிகமாக இருக்கின்றது. முன்பைவிட, இப்பொழுது நம்முடைய தமிழர்கள் பல்வேறு நாடுகளில் படிப்பதற்காகவும், பணிகள் மற்றும் வேலைகள் பார்ப்பதற்காகவும் பல்வேறு நாடுகளில் எல்லாம் தங்கி இருக்கின்றார்கள். எங்கு போனாலும் எந்த நாட்டிற்குப் போனாலும் தமிழ் பேசுகின்ற மக்களைக் காண முடிகின்றது.

### 135 நாடுகளில் தமிழர்கள்

கிட்டதட்ட 135 நாடுகளில் தமிழர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். நம்முடைய தமிழர்களுடைய நலனைக் கருத்தில் கொண்டுதான் இந்தத் துறையை நம்முடைய திராவிட மாடல் அரசு உருவாக்கியது.

முன்பெல்லாம் செய்தித்தாள்களை எடுத்தால், வெளிநாட்டில் வேலை எனக் கூறி ஏஜென்டுகள் ஏமாற்றினார்கள் என்ற செய்தியை தினசரி பார்த்துக் கொண்டிருந்தோம். ஆனால், அந்த நிலை இன்றைக்குப் பெருமளவு மாறி இருக்கின்றது. ஏனென்றால், அயலகத் தமிழர் நலத்துறை மேற்கொண்ட பணிகளே இதற்கு முக்கியக் காரணம். சட்டபூர்வமாக வெளிநாடுகளில் வேலை வாய்ப்பை பெற வழிகாட்டும் விதமாக ஓவர்சீஸ் மேன்பவர் கார்ப்பரேஷன் லிமிடெட் என்ற நிறுவனம் செயல்பட்டு வருகின்றது.

சில மாதங்களுக்கு முன்பு செவிலியர்களுக்கு வளைகுடா நாடுகளில் உள்ள வேலைவாய்ப்பு பற்றி ஓவர்சீஸ் மேன் பவர் கார்ப்பரேசன் கமிட்டி நடத்திய கருத்தரங்கினை நான் தொடங்கி வைத்து உரையாற்றினேன்.

வெளிநாடு செல்வதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவது மட்டுமல்ல, பணிக்காக அயல்நாடுகளுக்குச் செல்லும் தமிழர்களின் நலனைக் காப்பதிலும் நம்முடைய அயலகத் தமிழர் நலத்துறை முன்வரிசையில் இருக்கின்றது. அங்கு ஏதேனும் சிக்கல் ஏற்பட்டாலோ, பணிக்கு எடுத்த நிறுவனங்களால் பாதிப்பு ஏற்பட்டாலோ அயலகத் தமிழர் நலத்துறைக்குத் தகவல் தெரிவித்தால், உடனே பாதிக்கப்பட்டவர்களைத் தொடர்புகொண்டு அவருடைய பிரச்சினையைத் தீர்க்கும் மீட்கும் பணியை நம்முடைய துறை மேற்கொள்கின்றது.

மீட்பது மட்டுமின்றி அவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கவும், உதவிகள் செய்யப்பட்டு வருகின்றன. அதனால்தான் இந்தத் துறை வெறும் அயலகத் தமிழர் நலத் துறை என்று மட்டும் சொல்லாமல், அயலகத் தமிழர் நலத்துறை மற்றும் மறுவாழ்வுத்துறை என்று சொல்கின்றோம்.

### மிகப்பெரிய ஒரு சாதனை!

வெளிநாடுகளுக்கு வேலைக்குச் செல்லும் பொழுது அங்கு தமிழர்கள் உயிரிழந்தால் முன்பெல்லாம் அவர்களுடைய உடலை, தங்களுடைய சொந்த ஊருக்குக் கொண்டு வருவதற்குக் குறைந்தது எட்டு மாதத்தில் இருந்து ஒரு வருடத்திற்கு மேல் ஆகும். ஆனால், நம்முடைய துறையின் சார்பாக எடுத்திருக்கின்ற பல்வேறு முயற்சிகளால் இறந்தவரின் உடலை எட்டிலிருந்து பத்து நாட்களுக்குள் அவர்களுடைய குடும்பத்துடன் நாம் சேர்த்துக் கொண்டு இருக்கின்றோம். இது மிகப்பெரிய ஒரு சாதனை. இந்த நிலை முழுவதும் மாறி இருக்கின்றது.

### இஸ்ரேல் - பாலஸ்தீன போரில் செவிலியர் பாதுகாப்பு!

சமீபத்தில் நடந்த உக்ரைன், ரஷ்யா போரின் பொழுது அந்த நாடுகளில் படித்த நம் மாணவர்களைப் பத்திரமாக மீட்டு, தமிழ்நாடு அழைத்து வந்தது நம்முடைய அயலகத் தமிழர் நலத்துறைதான். அதற்கு இந்த நேரத்தில் என்னுடைய பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன். இதேபோல இஸ்ரேல் - பாலஸ்தீன போரின் பொழுதும் அங்குள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்கள், செவிலியர்களைத் மீட்டுக் கொண்டு வந்தது இந்த அயலகத் தமிழர் நலத்துறைதான்.

தமிழ்நாடுவாழ் தமிழர்களுக்கு எப்படித் திட்டங்கள் தீட்டப்படுகின்றதோ, அதேபோல வெளிநாடு வாழ் தமிழர்களுக்கும் பல்வேறு திட்டங்களை நம்முடைய துறை மூலம் செயல்படுத்தி வருகின்றது. குறிப்பாக உலகம் முழுவதும் வாழும் தமிழர்களுடைய பிள்ளைகள் தமிழ் மொழியைக் கற்பதற்கு ஏதுவாக தமிழ்நாடு பாடநூல் கழகம் சார்பாக நூல்களை வழங்கி, அவர்கள் தமிழ் கற்பதற்கான வாய்ப்புகளையும் ஏற்படுத்தித் தந்து வருகின்றது. தமிழர்கள் பல நாடுகளில் தொழில் முனைவோராக உள்ளார்கள். அவர்களையெல்லாம் ஒருங்கிணைக்கின்ற விதமாகவும் பல்வேறு பணிகள் நம்முடைய அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### உலகத் தமிழ் எழுத்தாளர்களின் படைப்புகளுக்கு விருது!

இரண்டு நாட்களுக்கு முன்பு இதே அரங்கில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு சிறப்பாக நடைபெற்றது. ஏராளமான தமிழ் தொழில் முனைவோர்கள், பங்கேற்றவர்கள். அயலகத் தமிழர்களுடைய தமிழ் வளர்ச்சிப் பணிகளைப் போற்றுகின்ற வகையில் உலகத் தமிழ் எழுத்தாளர்களின் படைப்புகளுக்கு விருதுகளையும் பரிசுகளையும் நம்முடைய கழக அரசு தொடர்ந்து வழங்கி வருகின்றது.

இந்தப் பணிகள் அனைத்தும் அயலக தமிழர் நலத்துறை மற்றும் மறுவாழ்வுத் துறையின் வாயிலாகவே சாத்தியமாகின்றது. இந்த இரண்டு நாள் கருத்தரங்கில் அமைச்சர்கள், கவிஞர்கள், தொழில் முனைவோர்கள் எனப் பல்வேறு துறைகளைச் சேர்ந்த பெரியவர்கள் பங்கேற்று பேச உள்ளார்கள். இந்த அயலகத் தமிழர் தினம் 2024 மிகப்பெரிய வெற்றியைப்பெற என்னுடைய வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டு, இந்த நிகழ்ச்சியை மிகச் சிறப்பாக ஒருங்கிணைத்த நம்முடைய அமைச்சர் மஸ்தான் அவர்களுக்கும் துறை சார்ந்த அதிகாரிகள், அலுவலர்கள் அனைவருக்கும் என் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்து இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.


இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் முன்னிலையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் அயலகத் தமிழர் நலவாரியத் தலைவர் கார்த்திகேய சிவசேனாபதி வரவேற்புரை ஆற்றினார். அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வு துறையினுடைய ஆணையர் கிருஷ்ணமூர்த்தி நன்றி கூறினார்.

நிகழ்ச்சியில் திட்டக்குழு துணைத் தலைவர் ஜெயரஞ்சன், சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, அப்துல்லா, தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவர் லியோனி , சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகரராஜா, மலேசியா, இலங்கை, மொரீஷியஸ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் மனோ கணேசன், சாணக்கியன் ராசமாணிக்கம், மலேசியாவின் முன்னாள் அமைச்சர் டத்தோ கமலநாதன், வழக்கறிஞர் புகழ் காந்தி, சிங்கப்பூர் ராம், சிங்கப்பூர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தினகரன், டெக்டான் குழுமத் தலைவர் லட்சுமணன், விஸ்வா லோட்டஸ் குழுமத் தலைவர் துரை சிங்கம், ஏர் மொரீஷியஸ் தலைவர் மார்பே வெங்கடசாமி, மருத்துவர் ராமசாமி தனபால், சிங்கப்பூர் நாவுக்கரசு, கனடாவைச் சேர்ந்த சுபாஷ் சுந்தர்ராஜ், மலேசியாவை சேர்ந்த முகமது இக்பால் ராவுத்தர், லண்டன் ஃபைசல், தமிழ்ப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் மா.ராசேந்திரன், பொது மற்றும் மறுவாழ்வுத் துறை அரசு செயலர் நந்தகுமார் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.

# உடன்பிறப்பே... 40

**தி.மு.க. என்பது எதிரிகளால் அழிக்கமுடியாத இரும்புக்கோட்டை. இந்தக் கோட்டையைக் கட்டியெழுப்பி, இயக்க வரலாற்றில் இடம்பிடித்த தீரர்கள் சிலரை, வாரா வாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், இந்த வாரம், பெரியார்-அண்ணா-கலைஞருடன் பயணித்து கழகம் வளர்த்த தாழை மு.கருணாநிதி அவர்களைப் பற்றிப் பார்ப்போம்.**




# தாழை மு.கருணாநிதி : கலைஞர் பெயரில் ஒரு தளகர்த்தர்!

டெல்டா மாவட்டங்களில் ஒன்றான திருவாரூர், 1950-ஆம் ஆண்டுகளில் அன்றைய தஞ்சை ஜில்லாவின் அரசியல் எழுச்சி மையமாக இருந்தது. நில உடைமையாளர்களின் சாணிப்பால், சவுக்கடிக் கொடுமைகளுக்கு எதிராக கம்யூனிஸ்ட் கட்சியினர் போராட்டங்களை நடத்திய பூமி அது. காங்கிரஸ் செல்வாக்குக்கு எதிராக விவசாயத் தொழிலாளர்களை அணிதிரட்டி அமைப்பாக்கிக் கொண்டிருந்தனர் அன்றைய கம்யூனிஸ்ட் கட்சியினர். திராவிட இயக்கத்தின் செல்வாக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்தில் முன்னணித் தலைவராகத் திகழ்ந்த கலைஞரின் களப்பணியும் 50 களில் திருவாரூரை அரசியல் பரபரப்பான ஊராக மாற்றி இருந்தது. சற்றேறக்குறைய அந்த நாட்களில் ஐந்து வயது சிறுவனாக இருந்தார், இந்த வாரம் 'உடன்பிறப்பே' தொடரில் இடம் பெறும் கழகத்தின் பெரும் தொண்டர் தாழை மு.கருணாநிதி. அவர் பிறந்த தேதி ஜனவரி 1, 1945.

திருவாரூரில் இருந்து 10 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள அம்மையப்பன் எனும் ஊருக்கு அருகில் உள்ள கிராமம் தாழைக்குடி. அந்த கிராமத்துக்கு முறையான சாலை வசதிகூட அப்போது கிடையாது. ஆனால், அரசியல் நுழைந்திருந்தது. தாழை மு.கருணாநிதி அவர்களின் தந்தையார் முருகையன், விவசாயத் தொழிலாளி என்றாலும், அன்றைய காங்கிரஸ் கட்சியில் செயல்பட்டு வந்தவர். உள்ளூர் பண்ணையார்கள் காங்கிரஸ் கட்சியின் பிரமுகர்களாக இருந்தாலும், தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் முருகையன் அவர்களின் சொல்லுக்கு மதிப்பு இருந்தது.

## தந்தையின் செல்வாக்கு

வறுமையில் இருந்தும், பண்ணையடிமை முறையில் இருந்தும் மீண்டிருந்தவர் என்பதால், தனது மகனை அம்மையப்பனுக்குக் கல்வி பயில அனுப்பினார். அப்படிப் படிக்க வந்த கருணாநிதிக்கு, அம்மையப்பனில் தீவிரமாக இயங்கி வந்த பெரியார் இயக்க அறிமுகம், தி.மு.க தொடர்புகள் அவரை மாணவர் தி.மு.க வில் ஐக்கியம் ஆக்கின.

அவரது 12வது வயதில் தி.மு.கழகம் முதல்முறையாகத் தேர்தல் பிரச்சாரத்தில் தீவிரமாக இருந்தபோது, முருகையன் திருவாரூர் தொகுதியில் சுயேட்சை வேட்பாளராக களமிறங்குகிறார். அப்போது, இரட்டை வாக்குரிமை என்பதால், தாழ்த்தப்பட்டவர்கள் வேட்பாளராக நிறுத்தப்பட வேண்டும். ஆனால், பண்ணையார்களின் கையாள்கள் மட்டுமே தாழ்த்தப்பட்ட வேட்பாளராக நிறுத்தப்பட்டார்கள் என்பதால், தனிப்பட்ட செல்வாக்குடன் இருந்த முருகையன் சுயேட்சையாக ஆலமரம் சின்னத்தில் போட்டியிட்டார். அவருக்கு சுதந்திரா கட்சி ஆதரவு அளித்திருந்தது. முருகையன் வெற்றி பெறவில்லை என்றாலும், தனது மகன் அரசியல் கற்றுக் கொள்வதற்கு, அரசியல் பிரதிநிதித்துவம் பெறுவதற்கான முயற்சிகளைப் புரிந்து கொள்வதற்கு அது பாடமாக இருந்தது. அப்படித்தான் தாழை மு.கருணாநிதி உருவானார்.

தாழை அவர்களின் 20-வது வயதில் தி.மு.கழகம் முன்னெடுத்த இந்தி எதிர்ப்புப் போராட்டமும், விலைவாசி உயர்வுப் போராட்டமும் மிகத் தீவிரமாக இருந்தது. டெல்டா மாவட்டங்களில்தான் நெல் கடத்தல் சம்பவங்களும் அப்போது நடைபெற்றன என்பதால், கழகத்தின் சார்பில் முன்னெடுக்கப்பட்ட விலைவாசி உயர்வுப் போராட்டங்களில் அப்பகுதியில் தாழை தீவிரமாக இருந்தார். போராட்டத்தின் போது உண்ணாவிரதம் இருந்து கைது செய்யப்பட்டார்.

## சவாலான கழகப்பணி

திருவாரூர் சுற்றுவட்டாரப் பகுதிகளில் காங்கிரஸ் செல்வாக்கை இழந்து கொண்டிருந்த காலத்தில், கம்யூனிஸ்ட் கட்சி செல்வாக்கு செலுத்தத் தொடங்கி இருந்தது. அதே காலத்தில் தி.மு.கவை வளர்ப்பதை சவாலான பணியாக ஏற்றுச் செய்தவர் தாழை.

காங்கிரஸில் இருந்து விலகி, தி.மு.கவில் இணைந்தால் காங்கிரஸ்காரர்கள் அடிப்பார்கள். கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்து விலகி, தி.மு.க.வில் சேர்ந்தால், அந்தக் கட்சியினரும் அடிப்பார்கள். இப்படி அடிக்கு பயந்து கட்சி மாறாமல் இருக்கும் மக்களை தி.மு.கவுக்குக் கொண்டு வருவது எப்பேர்ப்பட்ட சவால் என்பதை அந்தக் காலத்தைக் கண்முன் நிறுத்தி புரிந்து கொள்ளலாம்.

அப்படித்தான் அவர் அம்மையப்பன் பகுதியில் தி.மு.க.வை அசைக்க முடியாத தூணாக எழுப்பினார்.தாழைக்குடி பஞ்சாயத்துத் தலைவர், கொரடாச்சேரி ஊராட்சி ஒன்றியத் துணை பெரும் தலைவர், கூட்டுறவு நிலவள வங்கித் தலைவர், தஞ்சை மாவட்ட நலக்குழு உறுப்பினர் என அடுத்தடுத்துப் பொறுப்புகள் அவரைத் தேடி வந்தன.

முத்தமிழறிஞர் கலைஞரின் விருப்பத்திற்குரிய தாழை மு,கருணாநிதிக்கு 1971-ஆம் ஆண்டில் சட்டமன்ற உறுப்பினராகும் வாய்ப்பை அளித்தார் கலைஞர். மிசா நெருக்கடி நிலை காலத்தின் போது ஓராண்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்த வருக்குத் திரும்பவும் திருவாரூர் தொகுதியில் இருந்து சட்டமன்ற உறுப்பினராக வாய்ப்பு அளித்தார் கலைஞர்.

> **மாவட்டச் செயலாளர் பதவிக்கு, தான் எவ்வளவு பொருத்தமானவர் என்பதை, தாழை தனது தொண்டால் உழைப்பால் நிரூபித்துக் காட்டினார்**

தாழையின் உழைப்பை அறிந்த கலைஞர் 1980ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலின் போது நாகப்பட்டினம் தொகுதியில் இருந்து மக்களவை உறுப்பினராக்கி, அனுப்பி வைத்தார்.

## கலைஞரின் ஆசை

மன்னை நாராயணசாமி, கோ.சி.மணி ஆகியோருடன் இணைந்து, தஞ்சை ஜில்லா கழக வளர்ச்சியைக் கவனித்த அவரை மாவட்டச் செயலாளராக்கி அழகு பார்த்தார் கலைஞர். இப்படி இளம் வயதிலேயே அடுத்தடுத்த பொறுப்புகளில் மிகச் சிறப்பாகச் செயல்பட்டவர் தாழை மு.கருணாநிதி

மாவட்டச் செயலாளராகவும் நாடாளுமன்ற உறுப்பினராகவும் ஒரே நேரத்தில் அவரே இருந்ததால் 'நான் ஒரு பொறுப்பில் மட்டும் இருந்து கொள்கிறேன்' என கலைஞரிடம் உரிமையோடு சொன்னவர் தாழை.

சிறப்புடன் பணியாற்றிக் கழக வளர்ச்சிக்குப் பாடுபட்ட அவர் 1986 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் தேதி திடீரென உடல் நலக்குறைவு காரணமாக இயற்கை எய்தினார்.

துடித்துப்போன கலைஞர், திருவாரூருக்குச் சென்று அஞ்சலி செலுத்தியதுடன், தனது உடன்பிறப்புக்காகப் பெரும் இரங்கல் குறிப்பு எழுதினார். "அனைவரிடமும் சகோதரப் பாசத்துடன் பழகக்கூடிய நற்பண்பாளர் தாழை மு.கருணாநிதி. மாவட்டச் செயலாளர்களில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினருக்கே அதிக வாய்ப்புகளைத் தர வேண்டும் என்பது என் ஆசை. எனது சொந்த மாவட்டத்திலேயே தாழை மு.கருணாநிதி மூலம் அந்த ஆசை நிறைவேறியது. மாவட்டச் செயலாளர் பதவிக்கு, தான் எவ்வளவு பொருத்தமானவர் என்பதை, தாழை தனது தொண்டால், உழைப்பால் நிரூபித்துக் காட்டினார்" என முத்தமிழறிஞர் கலைஞர் புகழாரம் சூட்டினார்.

தி.மு.கழகம் தேர்தலைச் சந்தித்த காலத்திலிருந்து திருவாரூர் தொகுதி கழகத்தின் கோட்டையாக இருக்கிறது. கலைஞர் அதை உருவாக்கினாலும், தாழை மு.கருணாநிதி போன்றவர்கள் அதைக் கட்டிக் காத்தனர். கழகத்தவர்கள் உருவாக்கிய அந்த மண் என்றும் தாழை மு.கருணாநிதி புகழைப் போற்றிக் கொண்டிருக்கும்.

...துடிக்கும்

## சுக்கு நூறாக உடையும் பா.ஜ.க. பிம்பம்!




2014-இல் இருந்து மோடி படைத்த புதிய இந்தியாக்கள் எத்தனை எனத் தனி நூலே போடலாம். அந்த அளவுக்குப் பெரிய பட்டியலை பா.ஜ.க.வினர் நீட்டுவார்கள். ஆனால், வேலையின்மை, சமத்துவமின்மை என மோடி ஆட்சியில் இந்தியா அடைந்து வரும் அசமத்துவம், நீர்த்துப் போயிருக்கும் ஜனநாயக விழுமியங்கள், பா.ஜ.க.வின் போலி வாக்குறுதிகள் என, சீர்குலைவுச் சித்திரத்தின் சாட்சியே 10 ஆண்டுகால மோடி ஆட்சி.

அதுமட்டுமல்ல, புள்ளிவிவரங்களை மறைத்தல், தன்னாட்சி அமைப்புகளின் பாரபட்சத்தன்மை, சிறுபான்மையினரை நிராகரித்தல், பேரிடர்களைக் கையாள முடியாமையும் பா.ஜ.க ஆட்சி அலங்கோலங்களில் அடங்கும். இவற்றுக்குப் பின்னணியில் இருக்கிற பா.ஜ.க.வின் மதப் பெரும்பான்மைவாதம், சர்வாதிகாரப் போக்கு, தெளிவற்ற பொருளாதாரப் பார்வையைப் போட்டுடைத்த ஆங்கில நூல் 'தி க்ரூக்ட் டிம்பர் ஆஃப் நியூ இந்தியா'. ஒன்றிய அமைச்சர் நிர்மலா சீதாராமனின் கணவரான பரகால பிரபாகர் எழுதிய இந்நூலின் அதிர்வுகள் கொஞ்சமும் குறையாமல், அப்படியே தமிழில் மொழி பெயர்த்திருக்கிறார் மூத்த பத்திரிகையாளர் ஆர்.விஜய்சங்கர். 'புதிய இந்தியா எனும் கோணல் மரம்' என்ற தலைப்பில் தமிழில் வெளியாகியுள்ள இந்நூலை எதிர் வெளியீடு பதிப்பகம் வெளியிட்டிருக்கிறது. விலை ரூ.399. நாடாளு மன்றத் தேர்தலுக்கு சில மாதங்களுக்கு முன்னால், பா.ஜ.க.வின் போலி பிம்பத்தைச் சுக்கு நூறாக உடைக்கும் ஆவணம் தமிழில் வெளியாகியிருப்பது மிகப் பொருத்தமானது. அவசியம் வாசிக்க வேண்டிய நூல்.

## :ப்ளாஷ்பேக்



ஆறுமுகம்

### காசுமாலை வரவேற்பு!

தமிழ்நாட்டை 1976-ஆம் ஆண்டு நெருக்கடி நிலை சூழ்ந்த போது, கழகத் தலைவர் அவர்கள் தஞ்சாவூர் நகரத்துக்கு வருகை தந்திருந்தார். அப்போது டாக்ஸி ஓட்டுநர் சங்கம் சார்பாக, காசுமாலை அணிவித்து வரவேற்றோம். நான் அன்று ஓட்டுநர் சங்கத் தலைவராக இருந்தேன். மிசா வழக்கு நிதியாகப் பயன்படுத்தப் படும் என்று தலைவர் அந்தக் காசு மாலையைச் சுட்டிக்காட்டி உரையாற்றினார். அப்போது நாங்கள் எடுத்துக்கொண்ட இந்தப் புகைப்படம் என் வாழ்வில் மறக்க முடியாத புகைப்படம் என்பேன்.

**-டாக்ஸி ஆறுமுகம், கழகப் பொதுக்குழு உறுப்பினர், தஞ்சாவூர் மத்திய மாவட்டம்.**


இது போன்ற அரிய புகைப் படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### அண்ணாவின் ஆங்கிலப் புலமை!

**1934-இல் திருச்சி தேவர் மன்றத்தில் 'நீதிக்கட்சியின் மாநாடு' நடைபெற்றது. கி.ஆ.பெ.விசுவநாதம் நடத்திய இந்த மாநாட்டில், மாநாட்டுத் தலைவரான சர்.ஏ.ராமசாமி முதலியார் பேச்சை தமிழில் மொழிபெயர்க்க, ஒருவரைத் தேடினார்கள். வழக்குரைஞர்கள் பலர் இருந்தும் மறுத்துவிட்டனர். அண்ணாவை ஒருவர் அறிமுகப்படுத்தினார். அப்போது, அண்ணா கல்லூரி முடித்த இளைஞர். பெரிய தலைவரின் பேச்சை மாணவர் மொழிபெயர்த்தால் நன்றாக இருக்குமா என்ற தயக்கம் இருந்தாலும், வேறு யாருமே இல்லாததால் சம்மதித்தார் கி.ஆ.பெ. ஆனால், அண்ணாவின் மொழி பெயர்ப்புத் திறனைப் பார்த்து கி.ஆ.பெ.வும், ராமசாமி முதலியாரும் வியந்துவிட்டனர்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 358




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131